★ ★
Registered as a Newspaper in Ceylon   விலை சதம் 10

ஈழநாடு

ஏடு 7   EELA NADU   இதழ் 154

National Tamil Daily   தேசிய தினசரி

(15-7-65)

விசுவாவசு ஆனி 31 ரபி அவ் பிறை 15 வியாழக்கிழமை

"இந்தியா உதவ முடியும்"

—அமரசிங்கா

புதுடில்லி, ஜூலை 14

தொழில் நுட்ப அநுபவம், பொருளாதார உதவி ஆகியவற்றில் இலங்கை, நேபாளம், பர்மா ஆகிய நாடுகளுக்கு இந்தியா உதவி அளிக்க முடியும் என இந்தியாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் திரு அமரசிங்கா கூறியிருக்கிறார். ஐந்தாண்டுத் திட்டங்களன், தொழில் நுட்ப ஆலோசனை ஆகியவற்றை இலங்கைக்கு இந்தியா வழங்கினால் நல்லது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அப்துல்லா சிறை மாற்றம்

உதகமண்டலம், ஜூலை 14

காஷ்மீர் தலைவர் ஷேக் அப்துல்லா இன்று காலை உதகமண்டலத்திலிருந்து கோடைக்கானலுக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

அரசியல் ஆசிரியர் விசாரணை

புத்தளம், புதன்

அரசியலில் தீவிரமாக ஈடுபட்டதாக குற்றம் சாட்டி தற்காலிகமாக ஆசிரிய சேவையிலிருந்து நீக்கப்பட்ட 48 ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட விசாரணை அடுத்த வாரம் ஆரம்பமாகுமெனத் தெரிகிறது.

புதிய தடை!

கொழும்பு, புதன்

அத்தியாவசியமில்லாமல் எந்தக் காணியையும் சுவீகரிக்கக் கூடாது என்று ஸ்தலஸ்தாபன சபைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மிக அவசியமான விஷயத்தில் காணியை சுவீகரிப்பதற்கு ஸ்தலஸ்தாபன அமைச்சர் உத்தரவிடுவார். அந்தந்தப்பகுதி உதவி ஸ்தலஸ்தாபன ஆணையாளர் மூலம் நிலைமையை ஆராய்ந்து அறிந்த பின் காணியை சுவீகரிப்பது பற்றி அமைச்சர் உத்தரவிடுவார்.

சமீபகாலத்தில் ஸ்தலஸ்தாபன சபைகள் சில, அரசியல் காரணங்களை கருத்தில் கொண்டு காணிகளை சுவீகரித்ததாக புகார் செய்யப்பட்டதைத்தொடர்ந்து இப்புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கங்கையைத் திருப்புவதுபற்றி காணி அமைச்சர் ஆலோசனை

நல்லூர், வியாழன்

மகாவலிகங்கையை பிற இடங்களுக்குத் திருப்பக்கூடிய சாத்தியக்கூறுகளைப்பற்றி ஆராயும்படி தம் அமைச்சிலுள்ள 200 அதிகாரிகளிடம் காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு சி. பி. டி சில்வா கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

நாட்டின் பொருளாதார விருத்திக்கு ஏற்றவகையில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய மகாவலி கங்கையை பிற இடங்களின் நீர்ப்பாசன உதவிக்குப் பயன்படச் செய்ய அமைச்சர் விருப்பம் கொண்டிருப்பதாக உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தெரிவித்தார். மகாவலிகங்கையை வட இலங்கைக்குத் திருப்ப வேண்டும் என்னும் தமது கட்சியின் நீண்டகாலக் கோரிக்கை விரைவில் பயனளிக்குமென எதிர்பார்ப்பதாகவும் திரு. சிவசிதம்பரம் நம்பிக்கை தெரிவித்தார்.

இவ்வார இறுதியில் வட பகுதிக்கு விஜயம் செய்யவிருக்கும் அமைச்சர் கிளிநொச்சித் தொகுதிக்கு விஜயம் செய்யும்போது நீர்ப்பாசனத்திட்டம்பற்றிக் கவனஞ் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். நூல்நிலையத்தில் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், வியா

தேசிய புத்தகவாரத்தையொட்டி யாழ்ப்பாணம் பொது நூல்நிலையத்தில் புத்தகக்கண்காட்சியொன்று இன்று மாலை ஆரம்பமாகிறது. இக்கண்காட்சி தொடர்ந்து 4 நாட்களுக்கு நடைபெறும். இப்புத்தகக்கண்காட்சியை யாழ்ப்பாண மேயர் திரு எஸ். வி. மகாதேவா திறந்துவைப்பார். திரு சி. எஸ. நவரத்தினம் சிறப்புரை நிகழ்த்துவார். இப்புத்தகக் கண்காட்சியில் இலங்கையில் வெளியிடப்பட்ட புத்தகங்கள் மட்டுமே காட்சிக்கு வைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையொட்டி யாழ்ப்பாணத்துள்ள பல பகுதிகளிலும் படக்காட்சி காண்பிக்கப்படவிருக்கிறது.

புத்தகக் கண்காட்சியின் இறுதிநாள் நிகழ்ச்சியாக யாழ்ப்பாண இலங்கை அமெரிக்க கலாசார நூல்நிலையத்தில் 'புத்தக வாசிப்பில் சாதனைகள்' என்ற கருத்தரங்கு நடைபெறும். திரு ஹண்டி பேரின்பநாயகத்தின் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் பேராசிரியர் கே. கேசையா, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் சபாரத்தினம், வேம்படி மகளிர் கல்லூரிஅதிபர் செல்வி தம்பையா ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

இப்புத்தகக் கண்காட்சி வட இலங்கை நூலகச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறுகிறது.

சைக்கோன் விமானநிலையத்தில் சிவில் போக்குவரத்து ரத்து

அமெரிக்கராணுவ முஸ்தீபு அதிகரிக்கும் அறிகுறியா?

சைகோன், ஜூலை 14

சைகோனிலிருந்து புறப்படும் பிரயாணிகள் விமானப் போக்குவரத்து இன்று ரத்துச்செய்யப்பட்டது. இதற்கான காரணங்கள் அறிவிக்கப்படவில்லை.

தென்வியட்நாமில் அரசாங்க நிலை ஒன்றையும், தலைமைக் காரியாலயம் ஒன்றையும் வியட்காங் கொரில்லாக்கள் இன்று தாக்கியதாக அறிவிக்கப்பட்டது.

நாறாங் தளத்திலிருந்து 26 மைல் தூரத்தில் இத்தாக்குதல் நடைபெற்றதாயும், வியட்காங்கியர் இப்பகுதியில் அரசாங்கத்துருப்புகளை முறியடித்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

டானாங்கிலிருந்து 40 மைல் தூரத்தில் வியட்காங்கியர் மீது அமெரிக்கா மிகப்பெரும் குண்டு வீச்சு ஒன்றை நடத்தினர் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

அதே சமயம் 3000 அமெரிக்கத் துருப்புக்கள் பியன்ஹோவாவில் இன்று கரையிறங்கின. சைகோனிலிருந்து 40 மைல் தூரத்தில் இத்துறைமுகம் அமைந்திருக்கிறது.

'டெலிபோன்' ஊழியர் மீது லஞ்ச ஊழல் விசாரணை

கொழும்பு, புதன்

லஞ்சஊழல் சட்டத்திருத்தம் அமுலுக்கு வந்ததும் முதல் முதலாக தகவல் தொடர்பு இலாகாவைச் சேர்ந்த டெலிபோன் பிரிவு ஊழியர் மீதான குற்றச்சாட்டு விசாரணை செய்யப்படவிருக்கிறது.

இத்தகவலை லஞ்ச ஊழல் விசாரணைக் கமிஷனர் திரு. வி. டி. பண்டித குணவர்த்தன தெரிவித்தார். லஞ்ச ஊழல்சட்டத்திருத்த மசோதா சென்ற வாரம் ஜனப்பிரதிநிதிகள் சபையில் வாக்கெடுப்பின்றியே நிறைவேறியது. இனி இது செனட்சபையில் நிறைவேறிய பின் கவர்னர் ஜெனரலின் அங்கீகாரம் பெறவேண்டும்.

தகவல் தொடர்பு இலாகாவிலுள்ள ஊழியர் சிலர் டெலிபோன் சேவை இணைப்பு சம்பந்தமாக ஆயிரம் ரூபாய்வரை லஞ்சம் வாங்குவதாக பத்திரிகைகளில் வெளியான செய்திகளைத் தொடர்ந்து இக்குற்றச்சாட்டுகள் பற்றி பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பிக்குமாறு லஞ்ச விசாரணைக் கமிஷனர் தமது உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ரயிலில் மதுபான விற்பனைத் தடை

செப்டம்பரில அமுலாகும்

கொழும்பு, புதன்

இம்மாதம் 16ந் தேதி வெள்ளிக்கிழமை முதல் புகையிரதங்களிலுள்ள சிற்றுண்டிச் சாலைகளில் மதுபானம் விற்பது தடைசெய்யப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட தேதியில் புதிய திட்டம் அமுல்செய்யப்படமாட்டாது.

செப்டம்பர் மாதம் 30ந் தேதியிலிருந்தே புதிய நடவடிக்கை அமுலுக்குவருமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ரயில்வே சிற்றுண்டிச்சாலைகளில் வேலைபார்க்கும் ஊழியர்களை வேலையின்று நீக்குவதற்குப் போதிய அவகாசம் வழங்கப்படவேண்டியிருப்பதால் தான் மதுபான விற்பனைத்தடை அமுலில் தாமதமேற்படுவதாக அறியப்படுகிறது.

பதவி உயர்வு; மந்திரி உத்தரவு?

யாழ்ப்பாணம், வியாழன்

லிகிதர் சேவையின் இரண்டாம் பிரிவிலிருந்து உத்தியோக மொழியில் தேர்ச்சியில்லை என்ற காரணத்தால் லிகிதர் சேவையின் முதல் வகுப்புக்குப் பதவி உயர்வு மறுக்கப்பட்ட தமிழ் ஊழியர்களுக்கு உடனடியாக பதவி உயர்வு கொடுக்க நடவடிக்கை எடுக்கும்படி நிதியமைச்சர் திரு யூ. பி. வன்னிநாயக்கா உத்தரவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

உத்தியோகமொழி அமுலால் தமிழ் ஊழியர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை ஆராய்வதற்கான மந்திரிசபை உபகுழுவில் நிதிமந்திரியும் ஒருவர் என்பது தெரிந்ததே. கடந்த வாரம் மந்திரிசபை உபகுழுவைப் பேட்டிகண்ட தமிழரசுக் கட்சித் தூதுகோஷ்டியினர் இதுபற்றி விவாதித்ததைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

லிகிதர் சேவையின் முதல் வகுப்பில் இருந்து விசேட வகுப்புக்குப் பதவி உயர்வு பெறாமல் இருக்கும் ஊழியருக்கும் சிங்களத் தேர்ச்சி நிபந்தனை நீக்கப்பட்டு விரைவில் உத்தியோக உயர்வு வழங்கப்படுமெனவும் தெரிகிறது.

"திறமைவாய்ந்த இந்திய இசையாளர் வரவேண்டும்"

நல்லூர், வியாழன்

திறமைவாய்ந்த இசைக்கலைஞர்கள் இலங்கை வருவதற்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூட்டிய இசைக் கலைஞர்கள் மகாநாட்டில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

இந்தியக் கலைஞர்கள் இலங்கை வருவதைத் தடை செய்ய வேண்டும் என்று திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தேசிய அரசாங்கத்திற்குத் தெரிவித்ததன் காரணமாக கலைஞர்களை வருவிக்க அரசாங்கம் தடை விதித்தது. இதனால் ஆடிவேல் விழாவுக்காக அடுத்தமாதம் கொழும்பு வரவிருந்த தென்னிந்திய நாதஸ்வர வித்துவான் சின்ன மௌலானா சாஹிப் வருகையும் தடை செய்யப்பட்டது.

ஆடிவேல் விழா நிர்வாகிகளும் இசைக் கலைஞர்களும் தமிழரசுக் கட்சித் தலைவரிடம் இதுபற்றிச் சமர்ப்பித்த கோரிக்கையைத் தொடர்ந்து திரு செல்வநாயகம் இசைக் கலைஞர்களைக் கொண்ட மகாநாடு ஒன்றினைக் கூட்டினர். இம்மகாநாட்டில் திறமையான கலைஞர்கள் இவ்வாறு வரவழைப்பதைத் தடைசெய்யக் கூடாது என அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. மாதக்கணக்கில் கலைஞர்கள் வந்து தங்குவது பற்றித்தான் கருத்து வேறுபாடுள்ளதாகவும் கூறப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கம் கடந்த ஆண்டில் கலைஞர்கள் வருவிக்கப்படுவதைத் தடைசெய்ய வேண்டுமென அரசாங்கத்திடம் கோரியிருந்தது.

சின்ன மௌலானா போன்ற கலைஞர்கள் இலங்கை வருவதனால் இசை வளர்ச்சியில் புதிய ஊக்கமும் உணர்ச்சியும் ஏற்படுமென இங்குள்ள கலைஞர்கள் அபிப்பிராயந் தெரிவித்ததைத் தொடர்ந்து திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அரசாங்கத்திடம் இதுபற்றித் தெரிவிப்பதாகக் கூறினர்.

"இராணுவத்தினரை எவரும் தாக்கவில்லை"

இயக்கச்சி இராணுவத்தாக்குதல் வழக்கில் தேவாலயக்குரு சாட்சியம்

சாவகச்சேரி, புதன்

இயக்கச்சி இராணுவமுகாமைச் சேர்ந்த பத்தொன்பது இராணுவத்தினர் மீது பளை பொலிஸ் இன்ஸ்பெக்டரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி குழப்பம் செய்ததாகவும், தாளையடி வாசிகளான மரியாம்பிள்ளை பெனடிக்ற், அ. செபமாலை, அ. பத்திநாதர் ஆகியோருக்கு அடித்துக் காயம் விளைவித்ததாகவும், பிலிப்பு மோசேஸ் என்பவரின் இரண்டு வீடுகளுக்கும், சி. மரியாம்பிள்ளை என்பவரின் வீட்டிற்கும் சேதம் விளைவித்ததாகவும், அ. செபமாலையின் வீட்டிற்கும் உடைமைகளுக்கும் 8000 ரூபா நஷ்டமும், பி. பேதுரு பிள்ளை வீட்டிற்கும் உடைமைகளுக்கும் 600 ரூபா நஷ்டமும், அ. பத்திநாதரின் கடைக்கு 2000 ரூபா நஷ்டமும் விளைவித்ததாக இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

விசாரணையின்போது தாளையடி சென்ற் அன்ரனி தேவாலயத்தைச் சேர்ந்த திருவாளர் ஜேன் சாமபதி

(6ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

மனிதனுக்குப் பயப்படுவதைவிட்டு தெய்வ சத்தியத்தை மட்டும் தேடுவோமாயின் நாமனைவரும் தெய்வதூதராகி விடலாமென்பதே என் நம்பிக்கை. தெய்வ உண்மையை மட்டும் நாடுவதால்தான் மனிதரைப்பற்றிய பயமனைத்தும் எனக்குப் போய்விட்டதென்று நான் உறுதியாக நம்புகிறேன்.

—மகாத்மா

ஈழநாடு

EELA NADU National Tamil
Daily. Post Box 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffna
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
ஆனி ௴ 31 ௳ (15-7-65)

அந்நிய உதவி

இன்றைய பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையைக் காப்பாற்றுவதற்காக வெளிநாட்டு உதவிகள் வந்து குவியப் போவதாக தினசரி செய்திகள் வெளிவருவதை நாம் பார்க்கிறோம். அந்நிய செலாவணிப் பற்றுக்குறையை தீர்க்குவதற்கும் அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியை அதிகரிப்பதற்கும் வெளிநாட்டு உதவி நிச்சயமாக அவசியம்தான். இலங்கையில் இன்று தட்டுப்பாடாகவுள்ள உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களும் எமக்கு இன்று தேவைப்படுகிறது.

ஆனால் இறக்குமதி உருவில் கிடைக்கும் வெளிநாட்டு விஷயத்தில் சிறிது கவனமாக இருக்க வேண்டும். இலங்கையில் உற்பத்தியைப் பெருக்கக் கூடிய முறையிலேயே "இறக்குமதி" பரிசீலனை செய்யப்பட வேண்டும். இலங்கையில் இதுவரை புறக்கணிக்கப்பட்ட துறை உற்பத்தித்துறைதான். உணவு, உடை, கட்டிடச்சாதனங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் திட்டமிட்ட உற்பத்திக்கு இனியும் தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். உற்பத்தித்துறையில் திட்டமிட்ட அபிவிருத்திக்கு அந்நிய உதவி பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டியதுதான் எமது முக்கிய தேவையாகும். தயாரிக்கப்பட்ட, உற்பத்தியான பொருள்களின் இறக்குமதியில் அந்நிய உதவி என்ற நிலையில் நாம் வீழ்ந்துவிடக்கூடாது. எமது இன்றைய நிலையைப் பொறுத்தவரையில் நாம் மேலும் சில வருடங்களுக்கு உணவுப் பொருள்களை வாங்கத்தான் வேண்டியுள்ளது. என்றாலும் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் இறக்குமதியைக் குறைக்கவும் அத்தியாவசியப்பொருள்களின் திட்டமிட்ட உற்பத்தியை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகமிக அவசியம். உணவு, உடை, கட்டிட சாதனங்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதன்மூலமே இப்பொருள்களின் இறக்குமதியைக் குறைக்க முடியும்.

தேசிய அபிவிருத்திக்கு அரசாங்கமே பொறுப்பாகவிருப்பதால் தேசிய அபிவிருத்திக்குப் போதிய உத்தரவாதமும் உதவியும் அளிக்கவேண்டியது அதன் கடமை. இதற்குமாறாக, காலனி ஆதிக்கக் காலத்தில் போன்று பொருள்களின் இறக்குமதிக்கு உதவி அளிப்பது அதன் கடமையல்ல. எங்கள் சொந்த நாட்டிலுள்ள வளங்களைப் பயன்படுத்தி அத்தியாவசியப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு இயந்திர சாதனங்கள், மூலப் பொருள்கள், மற்றும் தொழில்நுட்ப உதவி ஆகியவைகள் உருவிலேயே எமக்கு அந்நிய உதவி தேவை. உணவு, உடை மற்றும் அத்தியாவசியபொருள்களில் நாம் சுயதேவைப் பூர்த்தியடைவதற்கு அந்நியஉதவி உபயோகமாக இருக்கவேண்டுமே தவிர என்றென்றும் அந்நிய உதவியிலேயே நாம் வாழக்கூடியதாக இருக்கக் கூடாது.

ஒரு சமயம் இந்தியாவில் உணவு நெருக்கடி ஏற்பட்ட பொழுது வெளிநாடு ஒன்று உணவு அனுப்ப முன்வந்தது. உணவாக அந்நிய உதவி பெறுவது இந்திய நாட்டுக்கே அவமானம் என்று அதை ஏற்க திரு. நேரு மறுத்தார்.

இலங்கையிலும் அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்திக்கு திட்டமிட்டு அவற்றை நிறைவேற்றாவிட்டால், பொருளாதார அடிமைத் தளையிலிருந்து நாம் விடுதலை பெற முடியாது. இதன்விளைவாக வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் தேசிய செல்வத்தைப்பெருக்க முடியாத ஆற்றலின்மை போன்ற அபாயங்கள் நீடித்து நிலை பெறக்கூடும்!

அறிவுப் பசியைத் தீர்க்கும் தரமான நூல்கள் தேவை

ஒரு நாட்டின்வளர்ச்சியை அந்தநாட்டுமக்களிடையே உள்ளதரமான நூல் நிலையங்களின் தொகையைக் கொண்டு அறியலாம். தரமான நூல்களின் அவசியத்தைப் பற்றி நூலக அலுவல்களில் பட்டம் பெற்ற யாழ்ப்பாண பொது நூல் நிலையப் பொறுப்பாளர் இக்கட்டுரையில் விளக்கியிருக்கிறார். தேசிய புத்தக வாரத்தைஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

— வே. இ. பாக்கியநாதன்
பி. ஏ., எம். எஸ். இன். எல். எஸ்.
(கௌரவ காரியதரிசி வடஇலங்கை நூலகச் சங்கம்)

ஆடிமாதம் 12-ந் திகதியிலிருந்து 18-ந் திகதி வரை இலங்கையின் சகல பகுதிகளிலும் நடந்துகொண்டிருக்கும் தேசிய புத்தக வாரம் சில குறிக்கோள்களைக் கொண்டிருக்கிறது.

உலகில் வெளியாகும் பல்லாயிரக்கணக்கான பத்திரிகைகளையும், புத்தகங்களையும் எழுதும் பாண்டித்தியம் படைத்த எழுத்தாளர்களை நாம் நேரே சந்திக்க முடியாவிடினும் அவர்களின் படைப்புக்கள் மூலம் எம்மை அவர்களோடு தொடர்பு படுத்தி வைக்கும் தலையாய சேவையை எமது நூலகங்கள் ஆற்றிவருகின்றன. நல்லவரோடு இணங்கி வாழச் செய்கின்றன.

ஒரு நாட்டின் அறிவு வளர்ச்சியை மக்களிடையே நிலவும் தரமுடைய நூல் நிலையங்களின் தொகையைக்கொண்டு அறியலாம் என்று ஒரு பெரியார் கூறினார். ஆனால் அதில் எவ்வளவு உண்மை பொதிந்து கிடக்கிறது என்பதை மேலைத் தேசங்களான இங்கிலாந்து, நோர்வே சுவீடன், டென்மார்க், ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் கீழைத் தேசங்களான இயப்பான், ரஷ்யா இந்தியா ஆகிய வற்றிலிருந்தும் தெட்டென நாம் அறிந்து கொள்ளலாம். அவர்களின் அறிவு வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மூலகாரணமாக அமைந்தது அறிவுப் பெருக்கத்துக்கு ஆக்கம் கொடுக்கும் நூல்நிலையங்களே. இங்கெல்லாம் வங்கியிலே பணம் எடுக்கக் காத்து நிற்போரைப்போல நிற்பர் நூல்நிலையங்களுக்குப் போகும் மக்கள். அறிவுத்தாகம் அவ்வளவு! தொட்டனைத்தூறும் மணற்கேணியாகவும், எடுக்க எடுக்கக் குறையாது வழங்கும் தங்கச்சுரங்களாகவும் மிளிர்கின்றன.

ஆனால் எம்மவரிடையே நிலவும் பரிதாபகரமான நிலைமையை எண்ணும் பொழுது வேதனைப் படவேண்டியிருக்கிறது. மாமியார் வீடு செல்லும் மருமகள்போல வேண்டா வெறுப்பாக நுழைவோர் பலராக இருப்பதைக் காணலாம்.

அறிவுக்கும், ஆறுதலுக்குமாக எமது நூல் நிலையங்களைப் பேணி வருபவர்கள் சிறு தொகையினரே. இதை புள்ளிவிபரங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. இது பொதுமக்கள் குற்றமல்ல எமது நூல்நிலையங்களின் குற்றம் தான்.

உரிமைகளை அனுபவிப்போர் சில கடமைபாடுகளுக்கும் உரியவர்களாகின்றார்கள் என்பதை எம்மவரில் பலர் மறந்துவிடுகின்றார்கள். பொதுஜன நூல் நிலையம் என்றதும் உளத்தில் சொல்ல முடியாத ஓர் உணர்வு வருவது இயற்கை. பொதுஜனம் என்றதும் அதில் பாகுபாடின்றி யாவர்க்கும் பொது என்ற பொதுவுடமைக் கொள்கை தலை தூக்குகிறது. அப்படிப் பொதுமக்கள் என்னுவதில் தப்பில்லை. அதில் உண்மையும் தங்கியிருக்கிறது. பொது என்றதும் இது எம்முடைய சொத்து என்று எதையும் நாம் எண்ணிவிட முடியாது. பொதுமக்களின் மனதைக்கொண்டு, பொதுமக்களின் நன்மைக்காக நடாத்தப்படுவதுவே பொதுஜன நூல்நிலையமெனினும் சகலதும் எம்முடையது என்று எண்ணுவது தப்பு. இத்தப்பபிப்பிராயத்தால்தான் சிலர் பொதுப் பொருளைத் தமது ஆகக் கருதிவிடுகிறார்கள். இல்லாவிடில் நூல் நிலையங்களுக்கு வரும் புத்தகங்கள், சஞ்சிகைகள், வர்த்தமானிகள் கண்ணைக் கவரும் கலர்ப்படங்களைத் தமது உடமையாக்கிக்கொள்வார்களா?

ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்பது மாறி நூல்நிலையம் இல்லாத ஊருக்கு அறிவு பாழ் என்றவாறு மாறிவருகிறது தற்காலம். நூல்நிலையங்களை ஏற்படுத்துவது அறிவு படைத்த மக்களின் முக்கிய கடமையாகும். யாம் பெற்ற செல்வம் இவ்வையகம் பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு அவற்றை அமைக்க வேண்டும். அமைத்தவற்றைத் திறம்பட நடாத்தவேண்டும். அதற்கு ஆவன செய்ய முன்வரவேண்டும். "நூல்நிலையச் சேவை இரட்டை வழியைப் போன்றது. நூல்நிலையம் தன்னுடைய சேவையை மக்களுக்காக ஆற்றி வருவது ஒரு வழி அவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து அதன் முன்னேற்றத்திற்கு வழி வகுப்பது மற்றைய வழி! மேலைத் தேசங்களில் எத்தனையோ பணம் படைத்தோர் தங்கள் செல்வத்தை நூல்நிலையங்களின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அள்ளி வழங்குகின்றார்கள். நிர்வாக விடயத்தில் மிகவும் தாராள மனப்பான்மையுடனும், போட்டி மனப்பான்மை இல்லாதும் ஒத்துழைக்கிறார்கள். புத்தகங்களை விலை மதிப்புப் பாராது நூல்நிலையங்களுக்குத் தாராளமாகக் கொடுக்கிறார்கள். அப்படியான சேவையை எம்மவரால் செய்ய முடியாது என்பது எமது துணிபு அல்ல. நூல்கள் கொடுக்கப்படும் என்பது மாறி இனி வருங்காலங்களில் கேளாது கொடுப்பார்கள் என்பது எமது அசையாத நம்பிக்கை. ஏனெனில் நூல் நிலையங்கள் அவர்களுடையது. அவர்களே நூல்நிலையங்களை ஆக்குபவர்களும், அழிப்பவர்களும் இந்நிலைமை அவர்கள் கையில் இருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஆகவே நூல்நிலையங்கள் உங்களுக்காக என்ன செய்கிறது என்று கேட்பதுடன் நில்லாது நூல்நிலையங்களின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் என்ன, எப்படி, எப்பொழுது, எவ்வாறு செய்யவேண்டும் எனக் கேளுங்கள்.

சண்முகநாதனுக்கு 'கலாஜோதி' பட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

பல்லாண்டுக்கு மேலாக நாடகக்கலை, ஓவியக்கலை, நாடகத்துறை முதலிய பல துறைகளில் கலைகளின் வளர்ச்சிக்கும் ஊக்கமாக உழைத்தவர் திரு. எஸ். சண்முகநாதன். நாடகத்துறையில் அவர் ஆற்றிய பணி மிகச்சிறந்தது. இதன் சான்றாகவே கலை அரசு சொர்ணலிங்கம் தமது சிஷ்யனான அவருக்கு கலாஜோதி என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்துள்ளார்.

இவ்வாறு குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் முத்தமிழ் விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய திரு. கே. பீ. ஹரன் குறிப்பிட்டார்.

பட்டமளித்து உரை நிகழ்த்திய கலைஅரசு சொர்ணலிங்கம் பேசுகையில் கூறியதாவது.-

என்னிடம் நாடகக் கலை பயின்ற பல மாணவர்களில் மிகச் சிறந்தவராகவும் இயற்கையாகவே நாடகத்துறையில் சிறப்புமிக்கவராகவும் இருப்பதோடு பலகலைகளும் கைவரப் பெற்றவர் திரு. சண்முகநாதன். அவருக்கு பட்டமளிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு. சண்முகநாதன் பணியைப் பாராட்டி திரு. ஏ. ரி. பொன்னுத்துரை உட்படப் பலர் பேசினர்.

முந்திரிபயிர்ச் செய்கை

குரும்பசிட்டி, புதன்

குரும்பசிட்டி நலன்புரிசபையினர் குரும்பசிட்டிப் பகுதியில் முந்திரிகைச் செடி பயிர்ச்செய்கை செய்யவிருக்கின்றனர். இதற்கானகாணியும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. முந்திரிகை விதைகள் ஆவுஸ்திரேலியா தேசத்திலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன. சிறிய அளவில் முதலில் பரீட்சார்த்தமாக செய்கையை நடத்தி பலன் கிடைத்தால் அரசாங்க உதவியுடன் பெரியளவில் உற்பத்திசெய்யப்படுமெனவும் அறியப்படுகிறது.

ஐயாறன்

[illegible]

மூன்று மணி நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்திருந்தால் குண்டலினி சக்தி எழுந்துவிடுமாம், யோகசாஸ்திரமறிந்தவர்கள் இப்படிச் சொல்லக் கேட்டிருக்கிறேன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வரும்வரையில் யாழ்தேவி ரயில் வண்டியிலே ஒன்பது மணி நேரத்துக்குமேல் இருந்த இடம் விட்டு அசையாமல் (அசையவும் இடமில்லை) அப்படியே பலரும் உட்கார்ந்திருந்தோம் குண்டலினி சக்தி யாராருக்கு எழுந்ததோ தெரியவில்லை! இன்னும் பலர் நின்றுகொண்டேவந்தனர். பாவம். ரயிலில் அவ்வளவு கூட்டம்!

அந்த வண்டியிலே சாதாரணமாக 8 பெட்டிகள் இருக்கும். அன்று 12 பெட்டிகளை கூட்டத்தை முன்னிட்டுப் போட்டிருந்தனர். அப்படியிருந்தும் கூட்டம் தாங்கவில்லை. இன்னொரு ஸ்பெஷல் வண்டி விட்டிருக்கலாம். யாழ்ப்பாணத்திலேயே வண்டி நிறையக் கூட்டம். பிறகு பல ஸ்டேஷன்களிலும் முண்டியடித்துக்கொண்டு ஏறி நின்று தவம் செய்துகொண்டே பலரும் வந்தனர். இதில் என்ன விசேஷம் என்றால், காத்திருந்தவரெல்லாரும், ரயிலில் எப்படியோ ஏறிவிட்டதுதான். புளி மூடைகள் அடைத்தது போல அவ்வளவு சுகமாக இருந்தது பிரயாணம்,

• • •

தாகத்துக்குத் தண்ணீர் கிடையாது. இந்தியாவில் முக்கிய ஸ்டேஷன்களிலெல்லாம் 'குளிர்தண்ணீர்' வைத்துள்ளனர். இங்கு ஒரு ஸ்டேஷனில் கூட அப்படி இல்லை. தாகமென்றால் 'பார்லி'தான். வழியிலே லட்சக்கணக்காகத் தென்னை மரங்கள் உள்ளனவே; இந்தக் கோடை காலத்திலாவது நல்ல இளநீர் விற்க படாதா? இதுவரை விலை போகாத பழைய பாட்டிலதி 'பார்லி' தண்ணீரை 50 சதம் கொடுத்து வாங்கி, சாப்பிட முடியாமல் முக்கால்வாசியை அப்படியே திருப்பிக்கொடுத்துவிட்டார் அன்பர். பிரயாணிகளின் இவ்வித சாதாரண வசதிகளை இந்த ரயில்வே எப்போதுதான் கவனிக்கப்போகிறதோ!

அனுராதபுரம் ஸ்டேஷன் வந்ததும் ஒரு சிலர் இறங்கினர். 'வடே வடே' என்று இதுவரை விற்றுவந்தவர்கள் இப்போது புதிய "சங்கதி" போட்டு விற்றனர். "சுடுசுடு வடே, சுடுசுடு வடே" என்று விற்றனர். ரயிலிலிருந்த ஒரு தமிழ் அன்பர் "ஏ! வடே!" என்று உரக்கக் கத்தினார். வடை விற்றவர் ஒரு சிங்களவர்! பக்கத்திலிருந்தவர்கள் எல்லாரும் சிரித்துவிட்டனர். வடைகளுக்குப்பட, 'பார்லி' தண்ணீருக்கும் நல்ல வியாபாரம், அன்று போலன். ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்திலே குடிதண்ணீர் கூட இல்லை. அதனால் ஏழைகளும் கூட 50 சதம் கொடுத்து அசுத்தமான அந்தக் கலர் தண்ணீரை வாங்கிக் குடிக்கவேண்டியதாயிற்று. ரயில்வே நிர்வாகிகள், இதைக் கவனித்து ஒவ்வொரு பெரிய ஸ்டேஷன்களிலாவது சுத்தமான குடிதண்ணீர் விநியோகிக்க தக்க ஏற்பாடு செய்வார்களா?

• •

திடீரென்று ஒரு குரல் கூட்டக் கொடுக்காமல் ரயில் அநுராதபுரத்திலிருந்து புறப்பட்டுவிட்டது. காற்றுக்காகச் சற்றே கீழே பிளாட்பாரத்தில் இறங்கியிருந்த பிரயாணிகள் திடுக்குற்று அவசர அவசரமாக வண்டியில் ஏறினர். வண்டி புறப்படுமுன் ரயில் வதி மக்களுக்கு எச்சரிக்கை செல்வதே முறை. ஆனால் எவ்வித எச்சரிக்கையுமில்லாமல் ரயில் புறப்பட்டுவிட்டது. இதைப்பற்றி கேள்வி

(6-ம் பக்கம் பார்க்க)

ஜம்மு - காஷ்மீர் பாகிஸ்தானுக்கு கிடைக்கும் வரை போர் நிறுத்தம் சாத்தியமில்லை

இந்தியப் பிரதமரின் யோசனைக்கு பாகிஸ்தான் வெளிமந்திரி பூட்டோ பதில்

காஷ்மீர் முழுதும் பாகிஸ்தான் பகுதியாம்

கராச்சி, ஜூலை 14

பாகிஸ்தானின் பெரும்பகுதியை இந்தியா ஆக்கிரமித்திருக்கிறதென்றும், காஷ்மீர் உட்பட இப்பகுதிகளை இப்போதோ அல்லது பின்போ அது காலி செய்தாலொழிய அந்நாட்டுடன் போர் தவிர்ப்பு ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ள முடியாதென்றும் பாகிஸ்தான் அயல்நாட்டு மந்திரி திரு. பூட்டோ தேசிய சட்டசபையில் பேசியபோது தெரிவித்தார்.

வெளிநாட்டு விவகாரம் சம்பந்தமான விவாதத்தில் திரு. பூட்டோ பேசினார். விவாதம் 9 மணிநேரம் நடைபெற்றது.

"பாகிஸ்தானுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ள இந்தியப் பிரதமர் கேட்டிருக்கிறார். ஆனால் சீனாவுடன் போர்நிறுத்தம் செய்து கொள்ள அவர் விரும்பவில்லை. சீனப் பகுதிகளை இந்தியா ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாக சீனா கூறுகிறது. இந்தியப்பகுதிகளை சீனா ஆக்கிரமித்திருப்பதாக இந்தியா கூறுகிறது. பாகிஸ்தானைப்பொறுத்தவரை காஷ்மீர் உள்ளிட்ட சகல தகராறுகளையும் தீர்த்துக் கொண்டால் மட்டுமே இந்தியாவுடன் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ள முடியும்" என்றார் பூட்டோ.

"ஜம்மு-காஷ்மீர் பாகிஸ்தானுக்குச் சொந்தமானது. பாகிஸ்தானுக்கு அது கிடைக்கும்வரை பாகிஸ்தான் பூர்த்தியாகாது. பாகிஸ்தான் இந்தியாவுடனும், சீனா, ரஷ்யா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுடனும் நேச உறவுடன் இருக்கவே விரும்புகிறது ஆனால் இந்தியாதான் அதை விரும்பவில்லை" என்றும் திரு. பூட்டோ கூறினார்.

அமெரிக்காவுடன் கடந்த 10 ஆண்டுகளாக ராணுவக் கூட்டில் சேர்ந்திருக்கிறோம் உலகின் பல்வேறு பகுதிகளில் அமெரிக்கா தொல்லைகளில் மாட்டிக் கொண்டிருக்கிறது அப்படியிருந்தும் இந்தியாவுக்கு அது பெரும் ராணுவ உதவியளித்து வருகிறது என்றும் அவர் தொடர்ந்து கூறினார்.

"இந்தியாவையும், தென் கிழக்கையும் பிடிப்பதே சீனாவின் ஆசை"

துனிசிய அதிபர் கண்டனம்

துனிஸ், ஜூலை 14

ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் மீது சீனா ஆசைகொண்டிருக்கிறதென்றும், இது புதுவித ஏகாதிபத்திய ஆசை என்றும் துனிசிய அதிபர் போர்கிபா மேற்கு ஜெர்மன் டெலிவிஷனின் பேட்டியொன்றில் பேசிய போது குறிப்பிட்டார்

'இந்தியாவையும், தென்கிழக்காசியாவையும் பிடித்துக் கொள்ள சீனா விரும்புகிறது. சீனாவின் இந்தப் புதுவித காலனி ஆதிக்க ஆசை தத்துவார்த்த அடிப்படையில் உருவாகியிருக்கிறது. இது ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு பெரும் அபாயமாய் விளங்கிவருகிறது

ஆசியா—ஆபிரிக்கா மீது காலனி ஆதிக்கம் செலுத்த மேற்கு நாடுகள் விரும்பவில்லை உண்மையில் சீனாதான் புது காலனி ஆட்சியை ஏற்படுத்த விரும்புகிற'தென்றும் போர்கிபா கூறினார்.

"வரப்போகும் ஆசிய—ஆபிரிக்க மகாநாட்டில் சீனாவின் ஏகாதிபத்திய ஆசை பற்றிய பிரச்னையை துனிசியா கிளப்பும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

கோதாவரியில் புதிய பாலம்

ஹைதராபாத், ஜூலை 14

கோதாவரி ஆற்றின் மீது ரூ. 85 லட்சம் பெறுமதியான பாலம் ஒன்றை ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் நேற்று திறந்து வைத்தார். ஸ்ரீராமர் கோவிலுக்கருகே அமைக்கப்பட்டிருக்கும் இப்பாலத்தின் நீளம் 4000 அடியாகும். இப்பாலத்தின் வழியாக ஆண்டுதோறும் யாத்திரீகர்கள் செல்ல வழி ஏற்படும்.

ஜனாதிபதி நேற்று ஸ்ரீராமர் கோவிலுக்குச் சென்று வழிபட்டார். அவருடன் ராஜ்ய கவர்னரும், முதன் மந்திரியும் சென்றிருந்தார்கள். டாக்டர் ராதாகிருஷ்ணன் கோவிலுக்கு ரூ. 1000 அன்பளிப்பு செய்தார்.

18 தேசபடை குறைப்பு மகாநாடு

27-ம் திகதி ஜெனிவாவில் கூடும்?

வாஷிங்டன், ஜூலை 14

ஜெனிவாவில் 18 தேச படை குறைப்பு மகாநாட்டை நடத்த தயாராய் இருப்பதாக ரஷ்யா அமெரிக்காவுக்குத் தெரிவித்திருக்கிறது. ஜனாதிபதி ஜோன்ஸன் இதுபற்றி கூறுகையில் ரஷ்யாவின் அறிவிப்பு மிகுந்த ஊக்கமளிக்கிறது எனக் கூறினார் வருகிற 27-ம் திகதி மகாநாட்டைக் கூட்டலாமா என்பது குறித்து ஆலோசனை நடைபெற்று வருவதாயும் அவர் கூறினார்.

ஈக்வடோரில் ஆர்ப்பாட்டம்

லண்டன், ஜூலை 14

ஈக்வடோரில் ஏற்பட்ட அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இருவர் கொல்லப்பட்டனர், ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களை வீச, பொலிசார் கண்ணீர்புகை பிரயோகித்தார்கள். புதிய தேர்தல் நடத்த வேண்டும் எனக்கோரி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மிக்கோயன்-காந்தி சந்திப்பு

மாஸ்கோ, ஜூலை 14

சோவியத் ஜனாதிபதி மிக்கோயனை ஸ்ரீமதி இந்திரா காந்தி நேற்று சந்தித்துப் பேசினார்.

பூட்டோ

கராச்சி, ஜூலை 14

ஆசிய—ஆபிரிக்க மகாநாட்டை சீனா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டால் பாகிஸ்தான் அதனுடன் ஒத்துழைக்காது என திரு. பூட்டோ கூறினார்.

திபேத்தில் ஆயுத புரட்சியாம்

புதுடில்லி, ஜூலை 14

திபேத்தின் பல்வேறு பகுதிகளில் ஆயுதப் புரட்சி தொடர்ந்து நடக்கிறதென்பதற்கான அத்தாட்சிகள் லாஸா ரேடியோ சீன ஒலிபரப்புகளில் காணப்படுகின்றன.

சமீபத்தில் லாஸா ரேடியோ ஒலிபரப்பில் ஆயுதப்புரட்சியை அடக்குவதில் திபேத்தில் ராணுவத்தினர் பெரும் பங்கு ஆற்றியுள்ளனர் என்று கூறப்பட்டது. தாயகத்தின் தென்மேற்கு எல்லையைக் காப்பதிலும் ராணுவம் பெரும் சேவை புரிந்துள்ளதாக அது குறிப்பிட்டது.

திபேத்திலுள்ள எல்லா மக்கள் கட்சிகளும், தொழிலாளர்களும், பொதுமக்களும கடுமையான ராணுவத்திறமை பயிற்சி பெறக் கோரப்பட்டனர்.

பாகிஸ்தானுக்கு கடன் ஒத்திவைப்பு

வாஷிங்டன், ஜூலை 14

பாகிஸ்தானுக்கு 60 கோடி டாலர் உதவியளிப்பதை ஒத்திப் போட வேண்டும் என அமெரிக்கா கூறியிருப்பதாம் அமெரிக்கபார்லிமென்ட் இதை இன்னும் அங்கீகரிக்காததே இதற்குக் காரணம் என்றும் அறிவிக்கப்பட்டது.

நாஸர் மாஸ்கோ செல்வார்

கெய்ரோ, ஜூலை 14

ஐக்கிய அராபியக் குடியரசு ஜனாதிபதி நாஸர் வருகிற 27-ம் திகதி ரஷ்யாவுக்கு ராஜாங்க விஜயத்தை மேற்கொள்வார் என அறிவிக்கப்படுகிறது.

பிரபல விஞ்ஞானி காலமானார்

லண்டன், ஜூலை 14

விவசாயத்துறை விஞ்ஞானியான திரு. ஜோன்ரஸல் தம் 93-வது வயதில் இங்கு காலமானார். மண்வளம் சம்பந்தமாக உலகிலேயே இவர் பெரிய நிபுணர். ரஷ்ய அரசாங்கத்தின் அழைப்புமீது முன்பு அவர் ஆலோசனை கூறுவதற்காக ரஷ்யா சென்றிருந்தார்.

யுதாண்ட்

நியூயோர்க், ஜூலை 14

காஷ்மீரில் நிலைமை அபிவிருத்தியடைந்திருப்பது காரணமாக, இனி தாம் அது பற்றி அறிக்கை எதுவும் வெளியிடுவதற்கில்லை என ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் அறிவித்திருக்கிறார்.

சிலி ஜனாதிபதி

லண்டன், ஜூலை 14

சிலி ஜனாதிபதியும், பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் இன்று சந்தித்துப் பேசினார்கள்.

தென்வியட்நாம் போர் மேலும் விரிவடையும்

ஜனாதிபதி ஜோன்ஸன் அறிவிப்பு

வாஷிங்டன், ஜூலை 14

தென்வியட்நாமில் மேலும் உருவான முறையில் சண்டையில் ஈடுபடவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றும், வடவியட்நாமின் வலுத் தாக்குதல் தீவிரமடைந்து வருவது நிலைமையை அபாயத்துக் குள்ளாக்கியிருக்கிறதென்றும் ஜனாதிபதி ஜோன்ஸன் அறிவித்திருக்கிறார்.

சைகோனுக்குச் சென்றிருக்கும் பாதுகாப்பு மந்திரி திரு மக்னமாராவும், திரு ஹென்றி காபட் லாட்ஜும் வாஷிங்டன் திரும்பியவுடன் அமெரிக்க ரிசர்வ் படையை சேவைக்கு அழைப்பது பற்றியும், ராணுவ சர்வீசை விஸ்தரிப்பது பற்றியும் விரைவில் முடிவுசெய்யப்படும் என்றும் திரு. ஜோன்ஸன் மேலும் கூறினார்.

"தீவிர நிலை உருவாகிவருகிறது. தென் வியட்நாமுக்கு மேலும் துருப்புக்களை அனுப்புவோம். பெருமளவில் உருவான நடவடிக்கை விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்" என்றும் ஜனாதிபதி அறிவித்தார்.

இதற்கிடையில் ஹானோய் சென்றிருந்த பிரிட்டிஷ் மந்திரி திரு ஹரோல் டேவிஸ் என்பவர் லண்டன் திரும்பும் வழியில் லாவோஸில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், தமது வடவியட்நாம் பிரயாணம் உபயோகமாக இருந்தது என்றார். மேலும் விபரங்கள் கூற அவர் மறுத்துவிட்டார்.

அமெரிக்க விமானங்கள் நேற்று வடவியட்நாம் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தின. ஹானோயிலிருந்து 150 கிலோ மீட்டர் தூரத்தில் நடைபெற்ற இத்தாக்குதலில் வடவியட்நாம் இலக்குகள் பலத்த சேதம் அடைந்ததாகக் கூறப்பட்டது.

தென்வியட்நாமில் டானங் விமானத் தளத்துக்கருகே நடைபெற்ற ஒரு சண்டையில் 54 கொரில்லாக்கள் கொல்லப்பட்டதாக மேலும் அறிவிக்கப்பட்டது.

பீகார் வெள்ளப் பெருக்கில் 10 லட்சம் பேர் பாதிப்பு

புதுடில்லி, ஜூலை 14

அஸ்ஸாமிலுள்ள ஜோர்ஹட்டில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட அகதிகளை மீட்கும் முயற்சியில் ராணுவ படகுகள் உபயோகப்பட்டு வருகின்றன. 1200 பேர் இதுவரை அங்கு வெளியேற்றப்பட்டிருக்கின்றனர்.

பிரம்மபுத்திரா நதியில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கிய 85000 பேரில் 18000 பேர் ஏற்கனவே வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். 115 குடும்பங்கள் இங்கு வீடிழந்தன. வெள்ளத்தின் காரணமாக ரூபா 60 லட்சத்துக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. நீரைக் கட்டுப்படுத்த பெரிய வட்டமான கரைக்கட்டு இன்னும் 10 தினங்களுக்குள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

பீகாரில் 8 ஜில்லாக்களில் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் 10 லட்சம் பேர் பாதிக்கப்பட்டிருப்பதாய் மேலும் அறிவிக்கப்பட்டது. மீட்பு வேலையில் ஈடுபட்டிருந்த படகு ஒன்று கவிழ்ந்ததால் 3 குழந்தைகள் நீரில் மூழ்கின 400 படகுகள் இங்கு மீட்பு வேலையில் ஈடுபட்டிருக்கின்றன

கட்ச் ஒப்பந்தம்

பூட்டோ-ஸ்வரன்சிங் டில்லியில் சந்திப்பர்

புதுடில்லி, ஜூலை 14

கட்ச் ஒப்பந்தப்படி மந்திரிகளின் கூட்டத்தை டில்லியில் நடத்த பாகிஸ்தான் இணங்கியிருப்பதாகவும், வெளிநாட்டு மந்திரி திரு பூட்டோ அதில் கலந்துகொள்வார் என்றும் அறிவிக்கப்படுகிறது. இந்தியாவின் சார்பாக வெளிநாட்டு மந்திரி திரு. ஸ்வரன்சிங் கலந்துகொள்வார்.

ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் இக்கூட்டம் நடைபெறக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கராச்சியில் அதிகாரிகள் கூட்டத்தை நடத்துவது சம்பந்தமான இந்தியாவின் குறிப்புக்கு பாகிஸ்தான் இதுவரை பதிலளிக்கவில்லை. ஆனால் இரு பகுதி பொலிஸ் அதிகாரிகள் சந்திக்கவேண்டும் என அது கூறியிருக்கிறது. இதில் என்ன விஷயம் விவாதிக்கப்படும் என வினவியுள்ளது.

"திறந்த வெளி" சூரிய ஆராய்ச்சி

பிரிமூக் (டாட்), ஜூலை 14

மேற்கு ஜெர்மனி விஞ்ஞானி பேராசிரியர் கார்ல் ஆப்போ கிப்பன்ஹர் கூறிய யோசனையின்படி, புதுமையான முறையில் சூரிய ஆராய்ச்சி நிலையம் கட்டப்பட இருக்கிறது. இந்த ஆராய்ச்சிநிலையம் இத்தாலியின் "காப்ரி" தீவில் நிறுவப்படும். பொதுவாக சூரிய ஆராய்ச்சி அமைக்கப்படுகிற "டெலஸ்கோப்" சாதனத்தைச் சுற்றி கூண்டு ஒன்று அமைக்கப்படுவதுண்டு ஆனால் இவ்வித கூண்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் காற்று உஷ்ணமடைந்து சுழலுவதால் ஆராய்ச்சிக்கு இடைஞ்சல் விளைவிக்கிறது. புதிய முறையில் எவ்வித கூண்டும் இல்லாமல் "திறந்த வெளி டெலஸ்கோப்" ஆக அமைக்கப்படும். ஆனால் மிக உயர்ந்த இந்த சாதனத்தை பாதுகாக்கவும், ஆராய்ச்சியின்போது காற்றின் வேகம் டெலஸ்கோப் சாதனத்தை ஆட்டாமல் இருக்கவும் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் சூரியன் அமைப்பு பூமியின் காலநிலைக்கும் அதற்கும் உள்ள சம்பந்தம் ஆகியவை குறித்து இந்த புதிய நிலையம் ஆராயும்.

ஹெல்சிங்கி, ஜூலை 14

ஹெல்சிங்கில் நடைபெறும் உலக சமாதான மகாநாட்டில் ரஷ்ய—சீனப் பிரதிநிதிகள் நேற்று மீண்டும் வாக்குவாதத்திலீடுபட்டனர்.

'கதைகள் படைப்பதால் பயனில்லை காப்பியங்கள் வேண்டும்'

நூல் வெளியீட்டு விழாவில் எம். பி.

சுழிபுரம், புதன்

எமது இலக்கியத்தில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமானால் அவை எமது பாரம்பரியத்தோடு ஒட்டியதாக இருக்க வேண்டும். பாரம்பரியத்தோடு கலவாத இலக்கியம் என்று நிலைக்க மாட்டாது. காலத்துக்குக் காலம் உருவத்தை மாற்றிக்கொண்டு கதைகள் படைப்பதால் பயன் இல்லை. என்றும் அழியாத நல்ல பயன் உள்ள காப்பியம், கவினம் போன்ற நூல்களை எமது நாட்டு எழுத்தாளர்கள் படைக்க முன்வர வேண்டும். அப்போது தான் நாம் பயன் பெற முடியும்" என நன்னிப் பெண் நூல் வெளியீட்டு விழாவில் நூலை வெளியிடுசெய்த வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற பிரதிநிதி திரு அ. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை வீரபத்திரர் சிவன் கோவில் மேலை வீதியில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் புலவர் மு. நல்லதம்பி அரங்கில் கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபர் திரு வி. எஸ். வில்வலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் இப்போது கதைகள் நிறைந்த காலம், தரம் குறைந்த படைப்புகள் படைக்கப்பட்டு ஆபாச அட்டைப் படத்துடன் மட்டும் நூல்கள் வெளியிடப் படுகின்றன. இவற்றையெல்லாம் எமது இளைஞர்கள் வாங்கிப் படிக்கின்றார்கள். இதனால் ஏதும் பலன் உண்டா என்றால் ஒன்றுமே இல்லை; தமது ஆராய்ச்சி மூலம் அனுபவரீதியாகவும் பயன்படத் தக்க வகையில் நூல்களை படைப்பவர்கள் முன்வர வேண்டும். எமது எழுத்தாளர்கள் சிறுகதைகளுடன் மட்டும்—கவிதைகளுடன் மட்டும் இல்லாது நீண்டகாலம் வாழக்கூடிய (தாகூரின் கீதாஞ்சலி போன்ற) நூல்களை படைக்க வேண்டும் [illegible] கள் நல்ல தரமான நூல்களை வெளியீடு செய்பவர்களுக்கு மக்களும் உதவியும் கொடுக்க வேண்டும் என்றார்.

முனி பார்செ சின்னத்தம்பி பேசுகையில்: "காப்பியங்களை படிப்பவர்கள் குறைவு. கதைகள் படிப்பவர்கள்—கதைகள் எழுதுபவர்கள் நிறைந்த இக்காலத்தில் பழைய காப்பியங்களின் கருத்தைக் கதைகளாக வடிக்க வேண்டும். அப்போதுதான் காப்பியத்தின் சுவை புகுதும் இவற்றை எமது எழுத்தாளர்கள் செய்ய வேண்டும். நாம் எழுத்தாளர்களுடைய நல்ல படைப்புகளை வரவேற்க வேண்டும் வாழ்த்த வேண்டும்." என்றார்.

ஆசிரியர் திரு ஆ. சதாசிவம் வரவேற்புரை நிகழ்த்தினர். திரு சி சரவணபவன் (சிற்பி) திரு இ மகாதேவன் (தேவன்) பண்டிதர் க. மயில்வாகனம் பண்டிதை செல்வி கா. பாச்சியம் திரு கி. செல்லிநாதபிள்ளை திரு க. சுப்பிரமணியம் திரு வை. நாகராசன் திரு ச. கந்தசாமி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்கள். தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாசாலை மாணவர்களது "யார் மாப்பிள்ளை" என்ற நாடகமும், அளியாலை நாடக மன்றத்தினரின் "வாய்க்காமி வள்ளி" என்ற நாடகமும், கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர் ச. இராசேந்திரத்தின் வேணு கானமும் வட்டு குணசேகரம் கோஷ்டியினரின் பாட்டுக் கச்சேரியும் நடைபெற்றன. நூல் ஆசிரியர் நகுலன் நன்றி தெரிவித்தார்.

மகத்தான 3வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மொடேர்ன் (பதுளை)

விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)

என். டி, ராமராவ், அஞ்சலிதேவி,
ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா,
மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா
மற்றும் பலர் நடித்த

லவகுசா

(முழுநீள கலர்ப்படம்)

உலகப் பொன்றி புகழும் இராமாயண காவியத்தின் திக்கிக்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
[illegible] சினிமாஸ் திரைகளில் பார்த்து மகிழுங்கள்!

தொழில் கோர்டு அமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா

அநுராதபுரம், யாழ்ப்பாணம் மட்டக்களப்பு திருமலை ஆகிய இடங்களில் தொழில் கோர்டுகள் இல்லாததால் தொழிலாளருக்குப் பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் இப்பிரதேசங்களில் கூடிய விரைவில் தொழில் கோர்டுகள் அமைக்க ஏற்பாடு செய்யும்படியும் ஐக்கிய இலங்கை [illegible] தொழிலாளர் சங்கம் தொழில் மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் கோரியுள்ளது.

காந்திய சேவா சங்கக் கூட்டம்

சாவகச்சேரி, புதன்

அகில இலங்கைக் காந்திய சேவா சங்கத்தின் பதினாறாவது வருடாந்திப் பொதுக் கூட்டம் இம்மாதம் 18-ந் திகதி யாழ்ப்பாண வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்;

சங்கச் சார்பில் சமூகத் தொண்டுகளை விரிவுபடுத்தல் பற்றியும் 1969-ல் வரும் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாத் திட்டம் பற்றியும் ஆராயப்படும்.

குடிநீர்க் கஷ்டம்

யாழ்ப்பாணம், புத

காரைநகர் தோப்புக்காடு பகுதியில் வாழும் மக்கள் குடிதண்ணீரின்மையால் பெரும் கஷ்டப்படுவதாக அறியப்படுகிறது. மாத ஆரம்பத்திலிருந்து குடிநீர் விநியோகிப்பதாக சமூகசேவைப்பகுதியினர் வாக்குறுதியளித்தும் இதுவரையும் குடிதண்ணீர் விநியோகிக்கப்படவில்லை. தோப்புக்காடு கிராம முன்னேற்றச் சங்கம், இவ்விஷயம்பற்றி நடவடிக்கை எடுக்குமாறு தந்திமூலம் வடமாகாண அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது.

எம். ஆர். சி. பி. பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம், வியா

சண்டிலிப்பாயைச் சேர்ந்த டாக்டர் ஏ. பாலசுப்பிரமணியம் வைத்திய உயர் பரீட்சையான எம். ஆர். சி. பி. (எடின்பரோ) பரீட்சையில் தேர்ச்சிபெற்றுள்ளார். இவர் காலஞ்சென்ற திரு. அப்பாப்பிள்ளை, திருமதி அப்பாப்பிள்ளை ஆகியோரின் புதல்வரும், முன்னாள் செனட்டர் திரு. எஸ். ஆர். கனகநாயகத்தின் மருமகனுமாவார்.

மகாநாடு தீர்மானிக்கும்

கொழும்பு, புதன்

எதிர்வரும் லங்கா சமசமாஜக் கட்சி மகாநாட்டில்;லங்கா சமசமாஜக் கட்சி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா தலைமையில் இயங்குவதா அல்லது பிரிந்து செயலாற்றுவதா என்பது பற்றி தீர்மானிக்கப்படுமெனத் தெரியவருகிறது

மகாவித்தியாலய விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், வியா

கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி வித்தியாலயத்தை அடுத்துள்ள மைதானத்தில் நடைபெற்றது. சிவப்பு இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. வித்தியாலய அதிபர் திரு வை. இரத்தினம் பரிசில்களை வழங்கினர்.

REGAL - JAFFNA
NOW SHOWING
GEORGE MONTCOMERY
IN
Man From Gods Country
(Cinemascope - Color)
Also:- Americans in Space

பிரேரணையை கொண்டுவந்தவர் ஆதரிக்காமல் விட்டார்

பட்டின சபையில் சம்பவம்

பருத்தித்துறை, செவ்

பருத்தித்துறை நகர சபையின் மாதாந்தக்கூட்டத்தில் 7-ம் வட்டார அங்கத்தவரான திரு. ஏ. சபாரத்தினத்தால் கொண்டுவரப்பட்ட 5 பிரேரணைகள் பிரேரிக்கப்பட்டு அநுமதிக்கப்பட்டபின் அதை வாபஸ் பெறப்போவதாக கூறப்பட்டபோது சபைத்தலைவரால் பிரேரித்து அநுமதிக்கப்பட்டபின் அதை வாபஸ் பெறமுடியாதென பிரேரணையை வாக்கெடுப்புக்குவிடப் பட்டபோது பிரேரித்தவர், அநுமதித்தவர் ஆகியோர் கூட வாக்களிக்காதிருந்தனர்.

நகரசபையின் தற்போதைய நிதிநிலைமை சரியில்லாதபடியால் பின்வருவனவற்றை தற்காலிகமாக நடைமுறைக்கு கொண்டுவரவேண்டுமெனத் தெரிவித்து சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து பிரேரணைகள் வருமாறு:

வாடி வீட்டை குத்தகைக்கு கொடுப்பதுடன் பொறுப்பாளரை இடமாற்றம் செய்ய வேண்டும். ஸ்தலஸ்தாபன ஆணையாளரின் உத்தரவுவரும் வரை தற்காலிகமாக நியமனங்கள் செய்யப்பட்டோரை நிறுத்தவேண்டும். ஞாயிற்றுக்கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் சந்தைபகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகள் சுத்தப்படுத்துவது நிறுத்தப்படவேண்டும். கரத்தை வண்டில் மூலம் சுத்தப்படுத்தப்படுவது நிறுத்தப்படவேண்டும், குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டு சாரதி இடமாற்றம் செய்யப்படவேண்டும்.

இதனை எதிர்த்து தலைவர் உபதலைவர், பி. பி. ஆறுமுகம், எம். மரியாம்பிள்ளை, ஆர். தங்கராசா, வி. தர்மலிங்கம் ஆகியோர் வாக்களித்தனர்.

மூன்று ஒழுங்கைகளைச் சீர் செய்வதற்கு ரூபா 5085 செலவிடவேண்டுமென திரு ஏ. சபாரத்தினத்தால் கொண்டுவரப்பட்ட பிறிதோர் பிரேரணையும் தோல்வியடைந்தது பிரேரணைக்கு ஆதரவாக ஏ. சபாரத்தினம், கே. சேனாதிராசா, எம். வேலும்மயிலும் ஆகியோரும் எதிராக தலைவர் உபதலைவர் உட்பட பி. ஆறுமுகம், எம். மரியாம்பிள்ளை ஆர். தங்கராசா, வி. தர்மலிங்கம் ஆகியோரும் வாக்களித்தனர்.

விசாரணை ஒத்திவைப்பு

குரும்பசிட்டி, புதன்

பலாலி கிழக்கு வாசியான சின்னர் எஸ்லுப்போல் என்பவரை கத்தியால் குத்திக் கொலைசெய்ததாக அதே கிராமத்தைச் சேர்ந்த நடேசு இராசையா என்பவர் மீது குற்றஞ்சாட்டி காங்கேசன் துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. ஜி எப். அத்துருபாரு முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது. காங்கேசன்துறைப் பொலிசார் இக்கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட சில பொருட்கள் அரசாங்க பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்ததைதொடர்ந்து நீதிபதி வழக்கு விசாரணையை இம்மாதம் 23, 28-ம் திகதிகளுக்கு ஒத்திவைத்துள்ளார்.

இவ்வழக்கில் எதிரிசார்பில் திரு, ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் வழக்கறிஞர் திரு கே வி எஸ் சண்முகநாதன் ஆஜராகியிருந்தார், காங்கேசன் துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு கே சிவபாதம் இவ்வழக்கை பொலிஸ் தரப்பில் நடத்தினர்.

காரின் கரும்புகையை சுத்தமாக்கும் கருவி

காரிலிருந்து வெளியேற்றப்படுகிற கரும்புகை, உடல் நலத்துக்கு தீங்கானது. இந்தக் கரும்புகையை சுத்தப்படுத்தும் கருவியை மேற்கு ஜேர்மன் ஸ்தாபனம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறது. இதைக் காரின் பின்புறம் சாமான்கள் வைக்கும் இடத்தில் பொருத்திக் கொள்ளலாம். இந்த ஏற்பாடு பெரும் வெற்றியை அளிக்கும் என நம்பப்படுகிறது. சிகரெட் பற்ற வைக்கும் கருவிக்கு பெட்ரோல் ஊற்றுவதைப் போல, காருக்கு பெற்றோல் ஊற்றும்போது, இக்கருவியிலும் சிறிது பெட்ரோலை ஊற்றி இயக்கலாம்; 'பெட்ரோல் குப்பி' அருகிலும் இக்கருவியை இணைத்துக் கொள்ளலாம்." தேசிய நலனின் அக்கறை கொண்ட அரசியல்வாதிகள் காரோட்டிகள் ஆகியோர் இக்கருவியின் நன்மையை புரிந்து கொள்ள, அந்த ஸ்தாபனம் பெரும் பிரசாரம் செய்து வருகிறது. இக் கருவியைக் காரில் கட்டாயம் பொருத்த வேண்டுமென்று சட்டம் வரக் கூடும்.

'பில்டர்' சிகரெட்டுகளுக்கு அமோக ஆதரவு

பான், (டாட) ஜூலை 14

மேற்கு ஜேர்மனியில் கடந்த ஆண்டு தயாரிக்கப்பட்ட 9000 கோடி சிகரெட்டுகளில் ஏறத்தாழ 80 சதவீதம், 'பில்டர்' சிகரெட்டுகளாகும். ஜேர்மனியில் விற்பனையான சிகரெட்டுகளில் 40 சத வீதம், சுமார் 3,50,000 தானியங்கி இயந்திர சாதனங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டதாகும்.

புகையிலை ஏற்றுமதியில் ஜேர்மனி சிகரெட் தொழில் பெரும் வெற்றி அடைந்துள்ளது. சுமார் 110 இலட்சம் டாலர் மதிப்புள்ள சிகரெட்டுகள் ஏற்றுமதிசெய்யப்பட்டன, இத்தாலி, ஆஸ்திரியா, சுவிட்ஸர்லாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து ஆகியவை, ஜேர்மனியிலிருந்து சிகரெட் இறக்குமதி செய்யும் நாடுகளில் சில, மேற்கு ஜேர்மனியில் ஒரு மனிதர் ஓராண்டில் சராசரி 2008 சிகரெட்டுகளை புகைத்துத் தள்ளுகிறார். ஆனால் அமெரிக்காவில் சராசரி 4035 சிகரெட்டுகளும், கனடாவில் 2829 சிகரெட்டுகளும் பிரிட்டனில் 2800 சிகரெட்டுகளும், ஜப்பானில் 2500 சிகரெட்டுகளும் ஊதித்தள்ளப்படுகின்றன. மற்ற தொழில் நாடுகளுடன் ஒப்பிடும்போது, ஜேர்மனியர் குறைவான அளவு சிகரெட்டுகளே புகைக்கிறார்கள்.

சூடான் கைகலப்பில் 72 பேர் பலி

கார்ட்டூம், ஜூலை 14

தென் சூடானில் ஏற்பட்ட கைகலப்பில் 72 கிளர்ச்சிக்காரர்கள் கொல்லப்பட்டதாய் அறிவிக்கப்பட்டது. ஜூபாவில் 50 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டது.

சுகாதார

உதவி டைரக்டர் யாழ். விஜயம்

குரும்பசிட்டி, புதன்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சுகாதார நிலையங்கள் பலவற்றிற்கு விஜயம் செய்யும் பொருட்டு சுகாதார சேவைகள் உதவி டைரக்டர் டாக்டர் பி. கே. டி. சில்வா செவ்வாய்க்கிழமை யாழ் நகர் வந்துள்ளார், மூன்று தினங்கள் இங்கு தங்கியிருந்து வடமாகாண சுகாதார சேவைகள் அதிபர் டாக்டர் சுதாதியலுடன் பல்வேறு சுகாதார நிலையங்களுக்கு நேரில் சென்று பார்வையிடுவார், சுகாதார இலாகாவைச்சேர்ந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் திரு. சில்வாவைச் சந்தித்து தமது குறைபாடுகளைத் தெரிவித்துக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

விளம்பரம்

ஊர்காவற்றுறைப் பட்டின சபை

லொறி விற்பனை

1965-ம் ஆண்டு ஆடி மாதம் 21-ந் திகதி பிற்பகல் 3-00 மணிவரை பின்வருவனவற்றிற்கு டென்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. பாவித்த அரைவாசி திறந்த செவ்லெட் 30 அந்தர் லொறி இல. சீ. லை. 4565.

2. ஆறு (6) பாவித்த டயர்கள் அளவு 700 20.

ரூபா 50-00 டென்டர் முற்பணம் கட்டி அப்பற்றுச்சீட்டுடன் எழுத்துமூலம் டென்டர் அனுப்பப்படவேண்டும்.

மற்றும விபரங்களை இககாரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

வே. சிவசம்பு,
தலைவர்,
பட்டினசபை,
ஊர்காவற்றுறை

பட்டின சபைக் காரியாலயம்,
ஊர்காவற்றுறை, 9-7-65
463

டெண்டர் விளம்பரம்

1965-ம் ஆண்டு ஆடி மாதம் 21-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை பின்வருவனவற்றிற்கு எழுத்துமூலம் சீல்வைத்த டெண்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2 மண்ணெண்ணெயால் இயங்கும் தண்ணீர் இறைக்கும் பம்பும், தொடுக்கும் குழாய்களும் தந்துதவ.

பம்பின் பெயரும் மற்றும் விபரங்களுடன் டெண்டர்கள் தலைவர் பட்டின சபை ஊர்காவற்றுறைக்கு அனுப்பப்பட வேண்டும்.

வே. சிவசம்பு,
தலைவர்,
பட்டின சபை,
ஊர்காவற்றுறை.

பட்டினசபைக் காரியாலயம்.
ஊர்காவற்றுறை. 9-7-65
464

விளையாட்டுப் போட்டி முடிவுகள்

குரும்பசிட்டி, புதன்

குரும்பசிட்டி உடையதாரகை இளைஞர் சங்கத்தினர் முதல் தடவையாக இல்லங்களுக்கான விளையாட்டுப் போட்டியை 'வார இறுதியில் திரு இ. மகேசன் தலைமையில் நடாத்திய போது' நடராஜா இல்லம் 277 புள்ளிகளைப் பெற்று சாம்பியன் ஸதானத்தை சுவீகரித்துக் கொண்டது. குரும்பசிட்டி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற மேற்படி விளையாட்டுப் போட்டியில் சுப்பிரமணியம் இல்லம், திருநாவுக்கரசு இல்லம் ஆகியன முறையே 204, 202 ஆகிய புள்ளிகளைப் பெற்று இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டன. கயிறு இழுத்தல் போட்டியில் சுப்பிரமணியம் இல்லமும் அஞ்சல் ஓட்ட நிகழ்ச்சியில் நடராஜா இல்லமும் முதலிடங்களைப் பெற்றன. போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு திரு இ. மகேசன் பரிசில்களையும் வெற்றிக் கிண்ணங்களையும் வழங்கினர். பிரிவுச் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டோர் விபரம் பின்வருமாறு:- கீழ்ப்பிரிவு-கே. குமாரமூர்த்தி; மத்தியபிரிவு- க. யோகமூர்த்தி; மேற்பிரிவு- கே. கருணாமூர்த்தி.

யாழ்ப்பாணம், வியா

மிருசுவில் விடத்தற்பளை கலைமகள் அரசினர் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி நாளை வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது. பிரதம விருந்தினராக வித்தியாதரிசி திரு. கே. கனகசபை கலந்து கொள்வார். திருமதி கே. கனகசபாபதி பரிசில் வழங்குவார். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் போஷகராகக் கலந்துகொள்வார்.

கூட்டுறவாளர் தினவிழா

சுழிபுரம், புதன்

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா நாளை தொடக்கம் 17-ம் திகதி வரை வட பகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினரால் கொண்டாடப்படவிருக்கின்றது.

முதல் மூன்று நாட்களும் பிரதம விருந்தினரா கூட்டுறவு ஆணையாளர் திரு. என். வனசிங்கா, காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வா, உள்ளூராட்சி அமைச்சர் திரு மு. திருச்செல்வம் ஆகியோர் முறையே கலந்துகொள்ளவிருக்கின்றனர். பொருட்காட்சியை யாழ். அரசாங்க அதிபர் திரு. என். டி. ஜெயவீர திறந்துவைப்பார். வாண பவனி போட்டிகள், பொதுக்கூட்டம், கலைநிகழ்ச்சிகள் ஆகியன நடைபெற ஏற்பாடாக உள்ளன, போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மூன்றாம்நாள் நிகழ்ச்சியின் போது திருமதி எம். திருச்செல்வம் பரிசுகள் வழங்குவார்,

'பாடும் கடிகாரம்'

மேற்கு ஜெர்மன் வணிகர் ஒருவர் உலகிலேயே பெரிய 'பாடும் கடிகாரம்' ஒன்றை வாங்கியுள்ளார். விஸ்பாடன் நகரிலுள்ள தமது அரும்பொருள் கடையில், தெருவின் போவோரின் கவனத்தைக் கவருவதற்காக, ஜன்னலில் அலங்காரப் பொருளாக இந்த "பாடும் கடிகாரத்தை" வைத்திருக்கிறர், ஜேர்மனியில் தயாரிக்கப்படும் 'கூவிடும் குயிலுடன் கூடிய சிறிய மரக்கடிகாரம்' உலகமெங்கும் போற்றப்படுகிறது. இதன் மறுமதிப்புத்தான் இப்பெரிய கடிகாரம்.

இந்தப் பெரிய கடிகாரத்தில் ஒவ்வொரு மணிக்கும் ஒருமுறை ஒரு மரக்குயில் வெளியே வந்து "கூ... கூ..." "கூ... கூ..." என்று இனிமையாகக் கூவும். போக்குவரத்து சத்தத்தைவிட 'கூ... கூ...' சத்தம் பெரியதாகக் கேட்கிறது. பின்னர் கூவிடும் குயில், தலையைத் தாழ்த்தி வணக்கம் செலுத்திவிட்டு தனது கூண்டுக்குள் மறைந்துகொள்கிறது.

கடிகாரக் குயில் கூவுவதைக் கேட்டும், பார்த்தும் மகிழ, கடையின் முன்பு திரளான சிறுவர்கள் கூடுகிறர்கள்.

ஆசிரியர்கலாசாலை விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வியாழன்

கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையின் இல்லங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப்போட்டி வருகிற சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. யாழ்ப்பாணம் எம். பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டியில் திரு டபிள்யூ ஏ. ஜே. டபுள்யூ ஜெயதிலக்கா பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறர். திருமதி ஜெயத்திலக்கா பரிசில்களை வழங்குவார்.

புதிய இ. போ. ச. டிப்போ

புத்தளம், புதன்

புத்தளம் பகுதி பஸ்சேவையை சீராக்கும் நோக்குடன் புத்தளம் டிப்போவுக்கு மேலதிக பஸ்கிடைத்ததும். அவைகளை நிறுத்துவதற்கேற்ற டிப்போ இதுவரை இல்லாதிருந்தது.

இப்பொழுது புத்தளம் பட்டினத்திலிருந்து ஒரு மைல் தூரத்தில் சேனைக்குடியிருப்பு என்ற இடத்தில் 3 ஏக்கர் நிலத்தில் புதிய டிப்போ ஒன்று கட்டப்படுகிறது' இந்த டிப்போவில் ஒரே சமயத்தில் 250 பஸ்கள் நிறுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்புதிய டிப்போ கட்டப்பட்டதும் புத்தளத்தை மத்திய டிப்போவாக வைத்து அநுராதபுரம் குருநாகலை, கண்டி, கொழும்பு நீர்கொழும்பு, சிலாபம் ஆகிய இடங்களுக்கு மேலதிக பஸ்கள் சேவைககு விடப்படும்,

பிரயாணிகள் சங்கம் அங்குரார்ப்பணம்

கைதடி, புதன்

நாவற்குழி பிரயாணிகள் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை நாவற்குழி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் சங்கத்தின் நோக்கங்களையும் நன்மைகளையும்பற்றிப் பேசப்பட்டதோடு தற்போதைய பிரயாண வசதியீனங்களுக்குத் தீர்வுகாணும் ஆலோசனைகளும் தெரிவிக்கப்பட்டன.

முதலில் யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்கு தனங்கிளப்பு ஊடாக ஒரு புதிய பஸ் சேவையை நடத்தும்படி மாவட்ட மனேஜரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்வருவோர் சங்க உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் சொ. சடாச்சரம், உபதலைவர் இ. சொர்ணலிங்கம், காரியதரிசி சி. திலகநாதன், உபகாரியதரிசி தி. சனகரத்தினம், தனாதிகாரி சி. சங்கரப்பிள்ளை நான்கு பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

விற்பனை செய்யாததால் பழுதடைகின்றன

பம்பலப்பிட்டி, புதன்

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பலதரப்பட்ட துணிவகைகள் கிராம அபிவிருத்தி திணைக்களக்களஞ்சியத்தில் பழுதடைந்து வருவதாகத் தெரிய வருகிறது. இத்துணிகள் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் வாங்கப்பட்டவையென்பது குறிப்பிடத்தக்கது.

இத்துணிகளை விற்பனை செய்வதற்கு பல முடிவுகள் எடுக்கப்பட்ட போதிலும் இவைகள் ஒன்றும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை.

மேஜைமீது சிங்கம்

பிரஸிபா, ஜூலை 14

சாப்பாட்டு மேஜைமீது ஒரு சிங்கம் உட்கார்ந்து கொண்டிருந்தது: இச்சம்பவம் பிரஸிபா அருகே கவிலோங் என்னுமிடத்தில் நடந்தது.

ஆங்கிலோ காம்பா என்பவருக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது, பீதிகொண்ட அவர் உடனே அறையின் கதவை மூடித்தாழிட்டார். கூக்குரலிட்டார்.

பிரஸிபா அருகே நடக்கும் சர்க்கஸிலிருந்து தப்பிய மூன்று சிங்கங்களில் இதுவும் ஒன்று. இச்சிங்கம் காம்பா வீட்டுக்கு வந்து முன்பக்கத்து ஜன்னல் வழியாக தாவிக் குதித்து சாப்பாட்டு அறைக்குள் புகுந்து ஓசைப்படாமல் மேஜைமீது ஏறி உட்கார்ந்து கொண்டிருந்தது. பின்னர் அது பிடிக்கப்பட்டு சர்க்கஸுக்கு திரும்பக் கொண்டு செல்லப்பட்டது. மற்ற இரு சிங்கங்களும் பிடிபட்டன.

சுகாதார நிலையங்களை பார்வையிட்டார்

பருத்தித்துறை, புதன்

சுகாதாரத்துறை உதவி அத்தியட்சகர் திரு. பி. கே. டி. சில்வா நேற்று பருத்தித்துறையில் உள்ள குடும்பநலத்திட்ட நிலையத்திற்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்தார்.

செப்டம்பர் மாதம் முதல் மேற்படி நிலையத்தில் குடும்பநலத்திட்ட பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்க ஆவனசெய்வதாகத் தெரிவித்த அவர் அதனுடன் இணைந்துள்ள பிரசவத்தாய்மார் பராமரிப்பு நிலையத்தையும், பருத்தித்துறை சுகாதாரக்கந்தோரையும் பார்வையிட்டார்.

வரி விளம்பரம்

தேவை

டயர் றிப்பெயர் வேலையில் நன்கு அனுபவமுள்ள ஒருவர் உடனடியாகத் தேவை. விபரங்களுக்கு: நோர்தேன் இண்டஸ்ட்றீஸ், 8/1 ஸ்ரான்லிறோ, யாழ்ப்பாணம். 645

அழகும், நடிப்புத்திறனும் கொண்ட கலையார்வம் உள்ள பெண் அங்கத்தவர்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும்: செல்வி ரெஜி. திரு. அந்தோனிப்பிள்ளை மே/பா 204, குருசலர் றோட், கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 647

வாடகைக்கு

வசதிகளுடன் கூடிய அறை வாடகைக்கு உண்டு. தனி நபர்களுக்கு, விபரங்கட்கு:- V. சிவலிங்கம், 17—5-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 648

விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள E. N 8000 தொடர்பிலக்கங்கொண்ட BSA 2.5 மோட்டோர் சயிக்கிள் விற்பனைக்குண்டு. மகேசன், மின்சார நிலையம், சுன்னாகம், தொலைபேசி: 899 646

தொய்வு, கசம், நீரிழிவு, வெள்ளை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

திருவிழாவில் திருடினராம்

முல்லைத்தீவு, புதன்

ஒட்டிசுட்டான் தான்தோன்றி ஈசுவரன் கோயில் திருவிழாவுக்குப்போயிருந்த செல்லன் மகன் இரத்தினம் பாணின் சங்கிலியைத் திருடியதாக சந்தேகத்தின்பேரில் ஆர். யோன் என்பவரை ஒட்டிசுட்டான் கிராமசேவையாளர் திரு. எஸ். துரைராசா கைதுசெய்து முல்லைத்தீவு அடிசனல் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்தார், மஜிஸ்திரேட் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

புத்தளத்தில் வரட்சி

புத்தளம், புதன்

கடும் வரட்சி காரணமாக புத்தளப்பகுதியில் குடியேற்றத்திட்டங்களிலிருந்த குடியேற்ற வாசிகள் குடும்பங் குடும்பமாக தினம் தினம் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

குடிதண்ணீர் இல்லாது கஷ்டத்தையும் தண்ணீரின்றி கால்நடைகள் தினம் தினம் இறந்து விடுவதால் வரும் கஷ்டத்தையும் பொறுக்க முடியாதே இவர்கள் வெளியேறுகின்றனர்.

கடும்வரட்சி காரணமாக குடியேற்றத்திட்டங்களில் கோழி நோய் பரவுவதால் பல கோழிப் பண்ணைகள் முற்றாக மூடப்பட்டுவிட்டன.

ஏற்பு ஊசிமருந்து தட்டுப்பாடு

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் ஏற்புவலியைத் தடுக்கும் ஊசிமருந்தான ரி. ரீ. எஸ். மருந்துத்தட்டுப்பாடு காரணமாக இங்குள்ளவர்கள் "மரமஞ்சள்" என்னும் மருந்தைக் கடைகளில் வாங்கி, ஆணி, கம்பி போன்றவைகளால் காயப்பட்டோருக்குக்கொடுக்கிறர்கள்.

கல்வி

B A, BSc G. A Q G.C.E. (A/L Arts & Science) வகுப்புகள் இம்மாதம் 12 முதல் நடைபெறுகின்றன. இம்மாத முடிவிற்குப் பின் எவரும் இவ்வகுப்புகளிற் சேர்க்கப்படமாட்டார். வெளியிடங்களில் படிப்பிக்கும் ஆசிரியர்க்காக 3 பாடசாலை விடுமுறை காலங்களிலும் நடைபெறும் மேற்படி பரீட்சை வகுப்புகள் ஆகஸ்ட் 12-ல் ஆரம்பமாகும். Special Degree வகுப்புகள் செப்டம்பர் 1-ல் ஆரம்பமாகும். G. C E. (A/L & O/L) 1965 டிசம்பர் பரீட்சை விசேட வகுப்புகள் ஆகஸ்ட் 1-ல் ஆரம்பமாகும். இவ்வகுப்புக்கு மட்டும் ஜூலை 31-ல் நேர்முகப் பரீட்சை. குறிப்பிட்ட தொகையினர் மட்டும் அனுமதிக்கப்படுவர். க. காசிப்பிள்ளை, பொதுக் காரியதரிசி, வடபிரதேச ஆசிரிய சங்கம், இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம். 649

வடபிரதேச ஆசிரியர் சங்கத்தால் அமைக்கப்பட்ட வடபிரதேசக் கல்விக் கழக வகுப்புகள் யாவும் யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் (யாழ்ப்பாண பஸ் நிலையத்துக்கு அண்மையிலுள்ளது) வார நாட்களில் மாலை 5மணி தொடக்கமும் சனிக்கிழமைகளிலும் விடுமுறை நாட்களிலும் காலை 8 மணி தொடக்கமும் நடைபெறும். உடனே முத்திரையொட்டிய உறையுடன் மனுச்செய்க; 17-7-65 காலை 8 மணி தொடக்கம் மேற்குறிப்பிட்ட வகுப்பு நேரங்களில் அவ் வித்தியாலயத்தில் நேரிற் சந்திக்கலாம். பெண்களுக்கு தனி வகுப்புகள். க. காசிப்பிள்ளை, பொதுக்காரியதரிசி, வடபிரதேச ஆசிரியர்சங்கம், இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம். 650

லஞ்சவிசாரணையில் தலையீடுசெய்தார்

பம்பலப்பிட்டி, புதன்

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் ஓர் பிரதான அங்கத்தவர் லஞ்சஅதிகாரியால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். ஓர் முன்னாள் மந்திரியின் அந்தரங்கக் காரியதரிசிக்கெதிராக புகார் செய்யப்பட்ட லஞ்சஊழல்கள் பற்றி சாட்சியம் கொடுக்க வந்தவர்களை சுதந்திரக்கட்சி அங்கத்தவர் பயமுறுத்தியதின் காரணமாகவே இவர் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

புதிய ஆயுள்வேத கமிஷனர்

புத்தளம், புதன்

தற்போது உள்ளூராட்சி அதிபராக கடமையாற்றும் திரு எம். டபிள்யூ எஸ். குணரத்ன புதிய ஆயுள்வேத கமிஷனராக நியமிக்கப்படுவாரெனத் தெரியவருகிறது.

தற்போதைய கமிஷனர் திரு டபிள்யூ ஜே. பெர்னாண்டோ கண்டி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டிருக்கிறர்.

பூங்காவன திருவிழா

சுழிபுரம், புதன்

வழக்கம்பரை அம்பன் கோவில் பூங்காவனத் திருவிழா இன்று நடைபெறவிருக்கிறது. பகல் விஷேட அபிஷேக ஆராதனைகளும் இரவு மேளக்கச்சேரி சங்கீதக்கச்சேரி ஆகியனவும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது,

வியாபாரம் பெருக விளம்பரம் செய்.

பெற்ரோல் ஊற்றுகையில் தீவிபத்து

சுழிபுரம், புதன்

நகரத்திலிருந்த 'பெற்ரோ'லைப் போத்தல் ஒன்றுக்குள் ஊற்றிக்கொண்டிருந்த போது பக்கத்தே எரிந்து கொண்டிருந்த லைவிளக்கிலிருந்து நெருப்புப் பற்றிக் கொண்டதனால் பொன்னாலையைச்சேர்ந்த இராமநாதன் என்பவர் ஒரு கைப் பக்கம் தீயினால் எரிந்து படுகாயத்துக்குள்ளாக்கப் பட்டார். இதனால் பலத்த பொருள் சேதமும் ஏற்பட்டது.

தமது தோட்டத்துக்கு நீர் பாய்ச்சுவதற்காக தண்ணீர் இறைக்கும் இயந்திரத்துக்குத் தேவையான பெற்ரோலை கலனாக அதனுள் ஊற்றுமுகமாக ஒரு போத்தலில் வார்க்கும் போதே இச்சம்பவம் ஏற்பட்டதெனக் கூறப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு தொல்புரம் கிராம சேவையாளர் உடன் சென்று விசாரணை செய்தார்.

கி. ச. உப தேர்தல் முடிவு

யாழ்ப்பாணம், வியாழன்

மானிப்பாய் கிராமசபை கீம் வட்டார இடைத் தேர்தலில் திரு. வி. குமாரசாமி 336 வாக்குகளும் கே. நாகலிங்கம் 237 வாக்குகளும் பெற்றனர். திரு குமாரசாமி 99 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். முன்பு கிராமசபை கீம் வட்டார உறுப்பினராக இருந்த எஸ். பொன்னம்பலம் குளவியில்போது காணாமல் போனமையால் இவ்விடைத் தேர்தல் சென்ற சனிக்கிழமை நடைபெற்றது.

தேர்தல் ஆட்சேப மனு

விசாரணை 20-ம் திகதி

பம்பலப்பிட்டி புதன்

வெலிமடை, ஹேவாகெட்ட, ஊவபரணகம ஆகிய தொகுதிகளின் தேர்தல் ஆட்சேப மனுக்கள் பற்றி விசாரணை செய்யவிருக்கும் நீதியரசர் திரு ஏச் என் ஜி பெர்னாண்டோ விசாரணை நடைபெறுவதற்கான திகதியை அறிவித்துள்ளார்.

இம்மாதம் 20-ந்திகதி இந்த ஆட்சேப மனுக்களுக்கு தனித்தனியே விசாரணைத் திகதி நிர்ணயிக்கப்படும்.

அதிகாரிகள் அதிகாரம் மந்திரி ஆராய்வார்

பம்பலப்பிட்டி, புதன்

உள்ளூராட்சித் தலைவர்களினது கடமைகள் பற்றியும் அவர்களது அதிகாரங்கள் பற்றியும் தனக்கு ஓர் அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்கும்படி ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் ஸ்தலஸ்தாபன அதிகாரியைக் கேட்டுள்ளார்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் உள்ளூராட்சித் தலைவர்களுக்கு எவ்வித மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்று மந்திரி தீர்மானிப்பார்.---

சுற்றுப்பிரயாணம்

யாழ்ப்பாணம் புதன்

சண்டிருப்பாய் இந்துக்கல்லூரி மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் உட்பட ஓர் சுற்றுப் பிரயாணத்தில் இன்று செல்லுகின்றார்கள். இவர்கள் கிளிநொச்சி பரந்தன் தாளையடி முதலிய இடங்களைப் பார்வையிட்ட பின்னர் திரும்புவார்களெனத் தெரியவருகிறது.

இராணுவத்தினரை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"எனது வீட்டிற்கு 400 யார் தூரத்தில் இராணுவ காவல் முகாம் இருக்கின்றது. சம்பவம் நடந்த அன்று ஒரு மணிபோல் வெலிச்சியாரின் வீட்டிற்கு முன்னால் குடியானவர்களுக்கும் இராணுவத்தினர்களும் வாக்குவாதம் நடைபெறுவதாக அறிந்தேன். வெலிச்சியர் முதல் சாட்சியமளித்த வி. ராஜநாயகத்தின் தகப்பன். நான் அங்கு போனபோது இராணுவத்தினர் மூவர் அங்கு நிற்பதைக் கண்டேன். இராணுவத்தினரிடம் குடியானவர்களுடன் வாக்குவாதப்படவேண்டாம் என்று கூறினேன். அதற்கு அவர்கள் ஏதாவது நடந்தால் நாங்கள் பார்த்துக்கொள்வோம் என்றனர். அந்த சமயத்தில் இரு இராணுவத்தினர் துவக்குடன் அங்கு வந்தனர். இராணுவத்தினர் அங்குநின்ற ஆட்களுடன் மீண்டும் வாக்குவாதப்பட்ட முயன்றனர். அவர்களிடம் நான் குடியானவர்களுடன் சண்டைக்குப் போகவேண்டாம் என்று கூறினேன். அரை மணித்தியாலத்தின் பின்னர் நான் வீட்டிற்குப்போய்விட்டேன்.

சிறிது நேரத்தால் யாரோ சமுறும் சத்தம் கேட்டது. நான் வீட்டிற்கு வெளியே வந்து நின்று பார்த்தேன். ஆமி ஜீப் ஒன்று வந்ததையும் வெலிச்சியார் வீட்டிற்கு முன்னால் நிற்பதையும் கண்டேன். ஜீப்பிலிருந்த இருபது பேரளவில் இறங்கி அங்கு நின்ற ஆட்களுக்கு அடித்தனர். நான் கைதட்டி அழைத்தும் அவர்கள் கவனிக்காமையினால் அந்த இடத்திற்குப்போனேன். அவர்கள் என்னைக் கவனிக்கவில்லை. அங்கு நின்ற ஒரு காரையும் அவர்கள் சேதப்படுத்தினர். என்னை ஒருவரும் தாக்கவில்லை. இராணுவத்தினர் ஒரு வீட்டிற்குச்சென்றனர். வீடுகளைச் சேதப்படுத்தும் சத்தம் கேட்டது. அப்போது அந்த வழியால் வந்த ஆமி ஜீப்பை கைகாட்டி மறித்தபோது அது நிற்கவில்லை. பின்னர் நான் எனது வீட்டிற்குப்போய் எனது மோட்டார்சைக்கிளில் பண்ணை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறையிட்டேன். அப்போது அங்கே ஒரு இராணுவவீரர் வந்தார். அவர்தான் முதலாம் எதிரி. காணையடியில் என்ன நடந்ததென்று அவரிடம் கேட்டேன். இராணுவத்தினருக்கு அடித்துவிட்டார்கள் என்றார். அதற்கு நான் ஒன்றரை மணிவரை நான் அங்கு நின்றேன். ஒருவரும் இராணுவத்தினரைத் தாக்கவில்லை என்று பதிலளித்தேன் பின்னை ஆஸ்பத்திரியில் யாராவது இராணுவத்தினர் அனுமதிக்கப்பட்டார்களா என்று பார்த்தேன். அங்கு ஒருவரும் அனுமதிக்கப்படவில்லை.

மேல்விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், திரு. சி. பாலகிருஷ்ணனின் உதவியுடன் ஆஜரானார்.

உத்தியோகத்தர் தேர்வு

யாழ்ப்பாணம், புதன்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மாவட்டக் கமிட்டி புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு வருகிற வெள்ளிக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது.

இன்று

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை சங்கீத வித்வத் சபையின் ஆதரவில் நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதியில் நடைபெறும் இசைவிழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:-

5-30—6-30 ஏ. பாலகிருஷ்ணன் கோஷ்டியார்—நாதஸ்வரம், 6-30—7-30 திரு. ராமசாமிஐயர்—வேணுகானம். திரு. ஏ. சங்கர ஐயர்—வயலின். திரு. எஸ். சங்கராம்—மிருதங்கம், 7-30—8-30 திரு. வி. கே. நடராசா — பாட்டு. 8-30—8-45 தலைமையுரை திரு. எஸ் தணிகாசலம், 8-45—9-45 டாக்டர் சி. கங்காதரன்—வேணுகானம், 9-45—10-45 எஸ். சண்முகரத்தினம்—பாட்டு.

ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முறை கிடையாதா? அன்று உயிர்ச்சேதமில்லாமல் தப்பியது ஆச்சரியம். இவ்விஷயங்களில் ரயில்வே சிப்பந்திகள் தங்கள் பொறுப்பை உணர்ந்து மக்களின் நன்மைக்கான முறையில் நடக்கவேண்டாமா? இதைப்பற்றி மேலதிகாரிகள் கண்டிப்பான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஓர் அன்பரிடம் கூறியதற்கு, ரயில்வே யூனியன்களிடம் மேலதிகாரிகளுக்கு மிகவும் பயம் என்றும், எவ்வித நடவடிக்கையும் எடுக்க அவர்கள் பயப்படுவதாகவும் சொன்னார் அன்பர். அட கடவுளே!

⁂

வருகிற 11ந் திகதி வெள்ளிக்கிழமை முதல் யாழ்ப்பாணம்-கொழும்பு ரயிலில் மதுபானம் விற்கக் கூடாதென்று மந்திரி உத்தரவு போட்டுள்ளார் அந்த உத்தரவை குடிகாரர்கள் உள்ளிட்டு பலரும் சிறப்பாகத் தாய்மார்களும் வரவேற்கிறார்கள். இதனால் குடி நிற்காவிடினும், இப்போத்தல்களில் மதுபானம் வாங்கிவந்து ரயில் பெட்டியில் குடிக்கக் கூடுமென்றும் ஓர் அன்பர் தெரிவித்தார்

1937-ம் வருடத்திலே ராஜாஜி சென்னையின் முதன் மந்திரியாக இருக்கையில் மதுவிலக்கை அமுலுக்குக்கொண்டு வருகையில் சென்னையில் பல பொதுக்கூட்டங்களில் பேசினார். அக்கூட்டத்திற்குச் சென்ற ஒரு குடிகாரர், குடியால் பெருங் கேடு ஏற்படுவது தமக்குத் தெரியுமென்றும், ஆனால் அதைஎவ்வளவுமுயன்றும விடமுடியவில்லை என்றும், மதுபானக்கடையைக் கண்டதும் குடிக்கத்தூண்டுவதாயும், இக்கடையை எடுத்துவிட்டால் குடியையும் தாம் விட்டுவிடலாமென்றும சேலத்திலே மதுபானம் அமுலுக்குவந்தபின், பெண்டுகள் காதிலும் கழுத்திலும் மூளியில்லாமல் நகைகளைக் காணக்கூடியதாக இருப்பதாயும் தெரிவித்தார்.

ரயிலில் மதுபான விற்பனையை அகற்றுவதால் குடி நின்றுவிடாதுதான், ஆனாலும் ரயிலில் குடிப்பழக்கம் குறைந்து பிரயாணிகளுக்கும் பெரிய நிவாரணமாக இருக்கும். ஆகவே துணிச்சலுடன் இந்த முதல் நடவடிக்கை எடுத்த மந்திரி ககவைப் பாராட்ட வேண்டும்.

⁂

நானேயோ தவம்செய்தேன் சிவாயநமவெனப் பெற்றேன் தேனின் அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான் தானே வந்து எனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான் ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே

—மாணிக்கவாசகர்

பாடப்புத்தகம்

பம்பலப்பிட்டி, புதன்

ஒரு பாடப்புத்தகம் பாடத்திட்ட அட்டவணைக்குப்பட்டதாயிருத்தல்வேண்டும், இவ்விதிக்கமையாத புத்தகங்கள் தற்காலிகமாகவே அங்கீகரிக்கப்படும்" என்ற தீர்மானமும் கல்வி பிரசாரப்பகுதி ஆலோசனைச் சபையினால் எடுக்கப்பட்டுளது. வேறு தீர்மானங்களும் சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நடவடிக்கை

பம்பலப்பிட்டி, புதன்

அரசாங்கக் கார்ப்பரேஷன்களில் சீரான வேலைகள் நடைபெறுவதற்கு வழிசெய்யும் முகமாக கைத்தொழில் மீன்பிடி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது சம்பந்தமாக அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் விரிவாக அறிந்து அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

பேர்லின், ஜூலை 14

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் பல்வைத்தியர் சங்கம் 1967-ல் நடுக்கடலில் நடைபெறவிருக்கும் சர்வதேச பல்வைத்தியர் காங்கிரஸில் கலந்துகொள்ளுமாறு உலக நாடுகளிலுள்ள தங்களின சகாக்களை அழைத்துள்ளது.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசைச் சேர்ந்த உல்லாசப் பிரயாணக் கப்பலொன்று மத்தியத் தரைக்கடலில் யாத்திரை செய்து கொண்டிருக்கும் போது அக்கப்பலில் இக் காங்கிரஸ் நடைபெறும்.

கூட்டுறவு வாரம்

புத்தளம், புதன்

புத்தளம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கம், புத்தளம் பட்டின கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றால் சர்வதேச கூட்டுறவு வாரம் கொண்டாடப்படுகிறது. தினம் கூட்டுறவு பற்றிய கருத்துரைகள் வழங்கப்படுகின்றன.

சித்தவைத்திய பட்டதாரிகள் கூட்டம்

சுழிபுரம், புதன்

சித்த வைத்திய பட்டதாரிகள் சங்க பொதுக்கூட்டம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை சங்கத் தலைவர் டாக்டர் இ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

இலங்கை தூதர்கள்

பம்பலப்பிட்டி, புதன்

மேற்கு ஜெர்மனிக்கு இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள திரு. ஜி. எஸ். பீரிஸ் அடுத்த மாதம் முதல் திகதி மேற்கு ஜெர்மனிக்கு பயணமாவார். மலேசியாவுக்கு இலங்கை ஹைகமிஷனராக நியமிக்கப்பட்டுள்ள ஜனாப் ஏ. எம். மகரூப் இம்மாதம் 27-ம் திகதி கோலாலம்பூருக்குப் பயணமாவார்.

காலி, காங்கேசன் துறைமுக அபிவிருத்தி

பம்பலப்பிட்டி, புதன்

காங்கேசன்துறை, காலி துறைமுகங்களின் அபிவிருத்தித் திட்டத்துக்கென அரசாங்கம் 5 கோடி 60 லட்சம் ரூபா அங்கீகரித்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்திலுள்ள நெருக்கடியைக் குறைக்கும் உத்தேசத்துடனேயே அரசாங்கம் இவ்வித நடவடிக்கை எடுத்துள்ளது. இத்திட்டம் விரைவாக அமுல் நடத்தப்படுமென அறியப்படுகிறது.

பத்திரிகை ஆசிரியர் காலமானார்

பம்பலப்பிட்டி, புதன்

'சிலுமின' பத்திரிகையின் ஆசிரியரான திரு. மீமன பிரேமதிலகா நேற்று காலமானார். அவருக்கு வயது 47. திரு. பிரேமதிலகா சிறந்த சிங்கள கவிஞர்களுள்ளும், சிறுகதை எழுத்தாளர்களுள்ளும் ஒருவராவார். இவர் இறப்பதற்கு சில தினங்களுக்கு முன்னரே இவரது சுயசரிதை புத்தகமாக வெளிவந்ததென்பது குறிப்பிடத்தக்கது

இணுவிலில் குருகுலம்

நல்லூர், வியாழன்

இணுவிலில் அடுத்த மாதம் குருகுலம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது யாழ்ப்பாணத்திலுள்ள பிராமணப் பிள்ளைகள் குருமாராகப் பயிற்சி பெறுவதற்கு உதவும் வகையிலேயே இக்குருகுலம் ஆரம்பிக்கப்படுகிறது.

இணுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் கோவிலில் நடைபெறும் இக்குருகுலம் அடுத்த மாதம் 2ம் திகதி மாவை ஆதீன பிரதம குரு சிவஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்களால் ஆரம்பித்துவைக்கப்படும். சுன்னாகம் பிராசீன பாடசாலை சமஸ்கிருத ஆசிரியர் இக்குருகுலத்தினை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை, புதன்

காங்கேசன்துறை மாங்கொல்லை இளைஞர் முன்னேற்றக்கழகத்தின் வருடாந்தக் கூட்டத்தில் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழாவன்று காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலைக்கண்மையில் வழமைபோல தண்ணீர்ப் பந்தல் நடத்துவதென முடிவுசெய்யப்பட்டது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்- திரு. ஆ. பாலசுப்பிரமணியம், உப தலைவர்- திரு. சு. ஜெயராஜா, காரியதரிசி- திரு. க. செ. கனகரத்தினம், உப காரியதரிசி திரு. கு. இராசேஸ்வரன், தனாதிகாரி- திரு. நாகராசா, மூவர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

மகாநாடு

யாழ் மாவட்ட கிராமசேவையாளர் சங்க இரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 9-30 மணியளவில் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறும். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் கிராமசேவையாளர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்வர். முக்கிய பிரேரணைகள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்படவிருக்கின்றன.

அரிசி, மாவு மூலம் அமெரிக்க உதவி

பம்பலப்பிட்டி, புதன்

அமெரிக்காவின் உதவி இலங்கைக்கு அரிசி, மாவு போன்ற பொருட்கள் மூலம் கொடுக்கப்படலாமெனத் தெரியவருகிறது. அமெரிக்காவும் இலங்கையும் ஒப்பந்தம் கைச்சாத்திட்டபின்னர் அடுத்த மாதம் தொடக்கம் அநேகமாக இந்த உதவிகள் ஆரம்பிக்கப்படலாமெனக் கூறப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் கொழும்பில் அல்லது வாஷிங்டனில் கைச்சாத்திடப்படலாமெனக் கூறப்படுகிறது.

குடிபோதையில் கார் செலுத்தும் சாரதிகள்

பேர்லின், ஜூலை 14

கடந்த வருடத்தில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் வீதி ஒழுங்குகளை மீறியதற்காகத் தண்டிக்கப்பட்ட கார்ச் சாரதிகளில் 75.4 சதவிகிதம் பேர் குடிபோதையில் இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். .8 சதவிகித விபத்துகளில் தான் அவர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். ஆயினும் இதர விபத்துகளைவிட அவை அதிக உயிர்ச்சேதமுள்ள விபத்துகளாகும்.

குடிபோதையிலிருந்த சாரதிகளால் நிகழ்ந்த ஒவ்வொரு 100 விபத்துகளிலும் 7 பேர் வீதம் கொல்லப்பட்டனர். 80 பேர் வீதம் காயமடைந்தனர். ஆனால் இதர ஒவ்வொரு 100 விபத்துகளிலும் இருவர் வீதம் கொல்லப்பட்டனர், 59 பேர் வீதம் காயமடைந்தனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 55-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.